# 1 கணபதி



முன்னொரு காலத்தில் கஜமுகாசுரன் என்று ஒரு அசுரன் இருந்தான். அவன் தேவர்களைக் கொடுமைப்படுத்தினான். தேவர்கள், சிவபெருமானிடம் முறையிட்டனர். சிவபெருமான், தேவர்களைக் காக்கத் திருவுளங் கொண்டார்; பிள்ளையாரைத் தோற்றுவித்தார்.

சிவபிரான் பிள்ளையாரை நோக்கி, ''இனிமேல் எனது கணங் களுக்கு நீயே தலைவன்'' என்றார். பிள்ளையார், கணங்களுக்குத் தலைவனான காரணத்தால் 'கணபதி' என அழைக்கப்படுகிறார்.

எங்கும் எப்போதும் கணபதியே முதலில் வழிபடப்படுகிறார். கோயில்களில் மாத்திரம் அன்றி ஆற்றங்கரை, குளக்கரை, தெருவோரம் முதலான இடங்களிலும் பிள்ளையார் வீற்றிருந்து அருள்பாலிக்கிறார்.

பிள்ளையாரை மிக இலகுவாக வழிபடலாம். பசுவின் சாணத்தை அல்லது மஞ்சளை அல்லது மாவை உருட்டி வைத்து, அதில் பிள்ளையாரை எழுந்தருளப் பண்ணுகிறோம். அவருக்குப் பிடித்த அறுகம்புல்லை அதில் சூட்டி வழிபடுகிறோம்.

கணபதியை வணங்கும்போது, நமது நெற்றியிலே மூன்று முறை குட்டுகிறோம்; தோப்புக்கரணம் போடுகிறோம். தெளிவான அறிவையும் இறைஞானத்தையும் வேண்டி நாம் கணபதியை வழிபடுகிறோம். அவர் எமக்கு எல்லா நலங்களையும் தந்தருளுகிறார்.

**கணபதியைக் கைதொழுது**
**கடமைகளை ஆரம்பிப்போம்**

## பயிற்சி

**இடைவெளி நிரப்புவோம்.**

1. கணங்களுக்குத் தலைவர் ____________________

2. பிள்ளையாருக்குச் சூட்டுவது ____________________

3. தெளிவான ________________ இறைஞானமும் வேண்டி கணபதியை வழிபடுகிறோம்.


4. பசுஞ்சாணத்தை அல்லது ____________________ உருட்டி பிள்ளையார் பிடிப்போம்.

5. கஜமுகாசுரனை அழிப்பதற்காகவே ____________________ தோற்றுவிக்கப்பட்டார்.

## செயற்பாடு

கஜமுகாசுரன் கதையை அறிந்து வகுப்பில் கூறுவோம்.

# 2 சிவபெருமான்



சைவ சமயத்தவர்களாகிய எமது முழுமுதற் கடவுள் சிவபெருமான். சிவன் என்றால் நன்மை செய்பவர் - அருள் புரிபவர் என்பது கருத்தாகும். சிவபெருமான் என்றும் எப்போதும் எல்லோருக்கும் நன்மையே செய்பவர் என்பதால் சதாசிவன் என்று பெயர் பெறுகிறார்.

சிவபெருமான் அன்பே வடிவானவர். அவரே உலகில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் தாயும் தந்தையும் ஆனவர். உயிர்களின் நன்மைக்காகவே அவர் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று தொழில்களையும் செய்கிறார். இறைவன் தமது சக்தியின் மூலமே இவற்றைச் செய்கிறார்.

இறைவனாகிய சிவபெருமான் தூய்மையே வடிவானவர். அவர் பிறப்பு, இறப்பு அற்றவர். எனினும் அடியார்களுக்கு அருள் புரிவதற்காக தமது மேலான தன்மையை விட்டு, வேண்டிய உருவில் கீழிறங்கி வருகிறார். நாயன்மார்களின் வரலாறுகளில் இத்தகைய அற்புதங்களை நாம் காணலாம்.

தலம் - திருப்பழனம் பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

வேதம் ஓதி வெண்ணூல் பூண்டு வெள்ளை எருதேறி
பூதம் சூழப் பொலிய வருவார் புலியின் உரி தோலார்
நாதா எனவும் நக்கா எனவும் நம்பா என நின்று
பாதம் தொழுவார் பாவம் தீர்ப்பார் பழன நகராரே.

திருச்சிற்றம்பலம்

இறைவன் எங்கும் நிறைந்தவர்; எல்லாம் அறிபவர்; பேரானந்த வடிவானவர்; சர்வ சக்திகளும் நிறைந்தவர். அவரை அன்புடன் நினைந்து வழிபட்டால் அவரது அருளைப் பெறமுடியும். வாழ்வில் அமைதியும் மகிழ்ச்சியும் பெறுவதற்கான ஒரே வழி, மனத்தூய்மையுடன் இறைவனை வழிபடுதலே ஆகும். இறைவழிபாடு இப்பிறவிக்கு மட்டுமன்றி இனி வரும் பிறவிகளுக்கும் நன்மை தருவது. ஆகவே இறைவனின் அருட் குணங்களைப் போற்றி வழிபாடு செய்வோம். வளமோடு வாழ்வோம்.

சதாசிவனைத் தொழுதிடுவோம்;
சகல வளத்துடனும் வாழ்ந்திடுவோம்;

## பயிற்சி


**விடை எழுதுவோம்.**

1. நமது முழுமுதற் கடவுள் யார்?
2. சிவம் என்பதன் பொருள் யாது?
3. சிவனது முத்தொழில்களும் எவை?
4. கடவுளின் இயல்புகள் மூன்றைக் கூறுக.
5. இறைவனை எவ்வாறு வழிபட வேண்டும்?
6. 'வேதமோதி...' எனும் தேவாரத்தில் சிவபெருமான் எவ்வாறு விபரிக்கப்படுகிறார்?

## செயற்பாடு

'வேதமோதி...' எனும் தேவாரத்தை பக்தியுடன் ஓதுவோம்.

# 3 ஆறுமுகன்



ஆறுமுகப் பெருமான், முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானின் திருக்குமாரர் ஆவார். அசுரர்களிடமிருந்து தேவர்களைக் காப்பதற்காக ஆறுமுகப் பெருமான் அவதரித்தார்.

சூரபத்மன், அசுரர்களின் தலைவன். அவன், சிவபெருமானை நினைந்து நீண்டகாலம் கடுந்தவம் புரிந்தான்; தவத்தின் பயனாக சிவபெருமானிடம் அரிய பல வரங்களைப் பெற்றான்; தான் பெற்ற வரங்களின் வலிமைகண்டு ஆணவம் அடைந்தான்; தேவர்களைச் சிறையில் அடைத்துத் துன்புறுத்தினான்.

சூரபத்மனின் கொடுமைகளைத் தாங்கமுடியாத தேவர்கள், தம்மைக் காத்தருளுமாறு, கருணையே உருவான சிவபெருமானிடம் முறையிட்டனர். சிவபெருமான், தேவர்களைக் காப்பதற்குத் திருவுளங் கொண்டார்.

சிவபெருமானின் நெற்றிக்கண்ணிலிருந்து ஆறு தீப்பொறிகள் தோன்றின. அவை சரவணப்பொய்கையில் விழுந்து அழகே உருவான ஆறு குழந்தைகளாக மாறின. ஆறு குழந்தைகளையும் கார்த்திகைப் பெண்கள் வளர்த்து வந்தனர். கார்த்திகைத் திருநாளில், அன்னையாகிய உமாதேவியார் ஆறு குழந்தைகளையும் ஒருசேரக் கட்டியணைத்தார். ஆறு திருமுகங்களும் பன்னிரண்டு கரங்களும் கொண்ட ஒரே குழந்தையாக அவை மாறின.

ஆறுமுகனான முருகப்பெருமான், தேவர்களைக் காத்தருளத் திருவுளங்கொண்டார்; சூரபத்மனுடன் பெரும்போர் புரிந்தார். போரின் போது சூரபத்மன் மாயத்தோற்றங்கள் பல எடுத்தான். இறுதியாக, சூரபத்மன், மாமரமாக உருவங் கொண்டான்.

முருகப்பெருமான், அன்னை உமாதேவியார் அளித்த சக்திவேல் கொண்டு, மாமரமாக நின்ற சூரபத்மனைச் சம்ஹாரம் செய்தார்;

அவனை இருகூறாக்கினார். சூரபத்மனது ஆணவம் அடங்கியது. அவன் முருகப்பெருமானைச் சரணடைந்தான். முருகப்பெருமான் அவனை மயிலாகவும் சேவலாகவும் மாற்றியருளினார்; மயிலைத் தமது வாகனமாகவும் சேவலைக் கொடியாகவும் கொண்டருளினார். தேவர்கள் துயர் நீங்கி மகிழ்ச்சி அடைந்தனர்.

முருகப்பெருமான், சூரபத்மனைச் சம்ஹாரம் செய்த அருட் செயலை நினைவு கூர்வதாக கந்தசஷ்டி விரதம் அமைகின்றது. அந்த விரதம் ஆறு நாள்கள் அனுட்டிக்கப்படுகிறது. இறுதி நாளன்று ஆலயங்களில் சூரசம்ஹாரம் நிகழ்த்தப்படுகிறது.

முருகப்பெருமானின் வரலாற்றைக் கந்தபுராணம் எனும் நூல் விரிவாகக் கூறுகின்றது. கந்தசஷ்டி விரத காலங்களில் ஆலயங்களில் கந்தபுராணம் படித்துப் பயன்கூறப்படுகின்றது.

**ஆறிரு தடந்தோள் வாழ்க!**

**ஆறுமுகம் வாழ்க!**

## பயிற்சி

I **சரியான விடையைத் தெரிவு செய்வோம்.**

1. சிவபெருமானின் திருக்குமாரர்

   1.விஷ்ணு 2.முருகன் 3. பிரம்மா

2. தேவர்களைச் சிறையில் அடைத்துத் துன்பப்படுத்திய அசுரன்.

   1. சூரபத்மன் 2. இந்திரன் 3. வருணன்

3. ஆறு குழந்தைகளையும் வளர்த்தவர்கள்

   1.தேவர்கள் 2.கார்த்திகைப் பெண்கள் 3. அசுரர்கள்

4. போரின் இறுதியில் சூரன் எடுத்த வடிவம்

   1. பலா மரம் 2. பனை மரம் 3. மா மரம்

5. முருகப்பெருமானை நினைந்து அனுட்டிக்கப்படும் விரதம்

   1. கந்தஷஷ்டி 2. நவராத்திரி 3. சிவராத்திரி

II. **பின்வரும் சொற்களுக்கான வினாக்களைத் தேடி எழுதுங்கள்.**

1. ஆணவம் - ______________________
2. சம்ஹாரம் - ______________________
3. முழுமுதற் கடவுள் - ______________________
4. மாயத்தோற்றங்கள் - ______________________

## செயற்பாடு

ஆறுமுகப்பெருமானது கதையை வகுப்பறையில் நடிப்போம்.

# 4 பக்த பிரகலாதன்

முன்னொரு காலத்தில் இரணியன் என்று ஓர் அசுரன் இருந்தான். அவன் கடும் தவம் செய்து இறைவனிடம் பல வரங்களைப் பெற்றான். அவ்வரங்களில் ஒன்று மனிதராலோ தேவராலோ விலங்குகளாலோ, இரவிலோ பகலிலோ, வீட்டிலோ வெளியிலோ, பூமியிலோ ஆகாயத்திலோ, எந்த ஆயுதங்களாலுமோ தனக்கு அழிவு நேரக்கூடாது என்பதாகும்.



அழியா வரம்பெற்ற இரணியன் அகங்காரத்தின் எல்லையைத் தொட்டான்; தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் எல்லையற்ற துன்பம் கொடுத்தான். எல்லோரும் தன்னையே கடவுளாகக் கொள்ளவேண்டும் எனக் கட்டளையிட்டான். எல்லோரும் 'இரணியாய நம' என்று வணங்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

இரணியனுடைய கொடுமைகளைத் தாங்கமுடியாத தேவர்கள் திருமாலிடம் சரணடைந்தனர். இரணியனிடமிருந்து தங்களைக் காப்பாற்றும்படி இரந்தனர். திருமால் அவர்களுக்கு அபயம் அளித்தார்.

இரணியனுக்கு ஒரு மகன் பிறந்தான். அவனுக்குப் பிரகலாதன் எனப் பெயரிட்டான். பிரகலாதன் வளர்ந்து கல்வி கற்கும் வயதை அடைந்தான். இரணியன், பிரகலாதனுக்கு ஒரு குருவை நியமித்தான். குரு பாடம் சொல்லிக் கொடுக்க ஆயத்தமானார். முதலில் 'இரணியாய நம' என்று கூறி இரணியனை வழிபடுமாறு கூறினார். பிரகலாதன் ஒன்றும் பேசவில்லை; மௌனமாக இருந்தான். குரு மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார். இரணியன் பார்த்துக்கொண்டிருந்தான். பிரகலாதன் 'ஹரி ஓம் நம' என பய பக்தியோடு கூறினான்.

இரணியனுடைய கண் சிவந்தது; புருவம் துடித்தது. குரு அச்சம் அடைந்தவராக 'இரணியாய நம' என்று மீண்டும் மீண்டும் சொல்லிக் கொடுத்தார். பிரகலாதன் 'ஹரி ஓம் நம' என்று மீண்டும் மீண்டும் கூறினான்.

இரணியன் கோபத்தின் எல்லையை அடைந்தான்; ''உனது ஹரி எங்கே இருக்கிறான்? அவன் இருக்குமிடத்தைக் காட்டு'' என அண்டம்

அதிரும்படி கேட்டான். பிரகலாதன் ‘‘ஹரி எங்கும் இருக்கிறான். அவன் தூணிலும் உள்ளான். துரும்பிலும் உள்ளான்’’ என்றான்.

இரணியன் அருகிலிருந்த தூணைக் காட்டி ‘‘உனது ஹரி இங்கும் இருக்கிறானா?’’ எனக் கேட்டான். ‘‘ஆம்’’ என்றான் பிரகலாதன். இரணியன் அத்தூணைக் காலால் உதைத்தான். தூண் இரண்டாகப் பிளந்தது. அதிலிருந்து சிங்க முகத்துடனும் மனித உடலுடனும் ஒரு உருவம் வெளிப்பட்டது. இரவும் பகலும் அற்ற மாலை வேளையில், அரண்மனை வாயிலில், இரணியனைத் தனது தொடையில் இருத்தி, அவன் உடலை தன் கை விரல் நகங்களாலேயே இரண்டாகப் பிளந்து இரணியனை வதம் செய்தது. கொடிய அரக்கன் அழிந்தமை கண்டு தேவர்களும் பூவுலக மக்களும் மகிழ்ச்சி அடைந்தனர்.

திருமால், அதர்மத்தை அழிக்கவும் தர்மத்தை நிலைநாட்டவும் யுகம் தோறும் அவதாரம் செய்கிறார். இரணியனை அழிப்பதற்காக திருமால் எடுத்த அவதாரமே இந்த நரசிம்ம அவதாரம் ஆகும்.

**அதர்மம் அழியும்;**
**தர்மம் நிலைபெறும்.**

## பயிற்சி

**சரி, பிழை கூறுவோம்.**

1. இரணியன் ஓர் அசுரன்.
2. பிரகலாதனின் மகன் இரணியன்.
3. இரணியனின் கொடுமை தாங்கமுடியாத தேவர்கள் சிவபிரானிடம் சரணடைந்தனர்.
4. பிரகலாதன் விஷ்ணு மந்திரத்தை ஓதினான்.
5. இறைவன் தூணிலும் இருப்பார்; துரும்பிலும் இருப்பார்.
6. இரணியன், அரண்மனையினுள் கொல்லப்பட்டான்.
7. நரசிம்மம் என்பது, சிங்கமுகமும் மனித உடலும் கொண்டது.
8. அகங்காரம் அழிவைத் தரும்.

## செயற்பாடு

திருமாலின் அவதாரக் கதைகளைத் தேடி அறிவோம்.

# 5 இறை வழிபாடு



நாம், சகல வேலைகளையும் கடவுள் வணக்கத்துடனேயே ஆரம் பிக்கிறோம். அதிகாலையில் நித்திரைவிட்டு எழும்போதே கடவுளின் திருநாமத்தைக் சொல்லிக்கொண்டு எழும்புகின்றோம். அந்த நேரத் திலிருந்தே எங்களை அறியாமலே வழிபாடு தொடங்கி விடுகிறது.

வீட்டினையும், சுற்றாடலையும் கூட்டித் தூய்மையாக்குகிறோம். நீராடி, தோய்த்துலர்ந்த ஆடை அணிகிறோம். இறைவனை நினைந்து

திருநீறு தரிக்கிறோம்; வீட்டு வாசலில் கோலம் போடுகிறோம்; உலகிற்கு ஒளி தரும் சூரியனை வணங்குகிறோம்; மலர் கொய்து, அவற்றை இறைவனுக்குச் சாத்துகிறோம்; திருவிளக்கேற்றி, திருமுறைகளை ஓதி வழிபடுகிறோம்.



நாம் உணவு அருந்தும்போதும் அந்த உணவைத் தந்த இறைவனை நன்றியோடு நினைந்துகொள்கிறோம்; பெற்றோரை வணங்கி, பாட சாலை செல்கிறோம்.

மாலையில் சூரியன் மறைந்ததும், விளக்கேற்றி வழிபடுகிறோம்; பாடங்களைப் படிக்கிறோம்; இறை சிந்தனையுடனேயே படுக்கைக்கும் செல்கிறோம்.

விரத நாட்களில் வீட்டில் விசேடமாக வழிபாடு செய்கிறோம். வீட்டைச் சுத்தம் செய்து, விரதம் அனுட்டிக்கிறோம். ஏழைகளுக்கும் விலங்குகளுக்கும் உணவளிக்கிறோம். பண்டிகை நாட்களிலும் இறை வனை வழிபட்டு ஏழை எளியவர்களுக்குத் தான தர்மம் செய்கிறோம். உற்றார் உறவினர்களோடு கூடி விருந்துண்டு மகிழ்கிறோம்.

கடவுளை மறவாது
கடமையைச் செய்வோம்.

**பயிற்சி**

**வீட்டில் இறைவனை வழிபடும் சந்தர்ப்பங்களை எழுதுவோம்.**

உ- ம் :- அதிகாலையில் நித்திரைவிட்டு எழும்போது, கடவுளின் திருநாமத்தைச் சொல்லிக்கொண்டு எழும்புகிறோம்.

1. ______________________
2. ______________________
3. ______________________
4. ______________________
5. ______________________

**செயற்பாடு**

வகுப்பறையில் கோலம் போட்டுப் பழகுவோம்.

# 6 மலை குடையானது



கோவர்த்தன மலைச் சாரலில் ஆயர்கள் பசுக்களை மேய்ப்பார்கள். கண்ணன் புல்லாங்குழல் ஊதுவான். அந்த இசையிலே எல்லோரும் மயங்குவார்கள்.

உலகம் செழிப்பதற்கு மழை அவசியம். இந்திரனே மழைக்கு அதிபதி. எனவே ஆயர்கள் ஒவ்வொரு வருடமும், மழைவேண்டி இந்திரனுக்கு விழா எடுப்பார்கள். தானே உலகத்தைக் காப்பதாக இந்திரன் கர்வம் கொண்டான். அதை உணர்ந்த கண்ணன் அம்முறை இந்திரனுக்குச் செய்யும் விழாவைத் தடுத்துவிட்டான்.

இந்திரன் கோபம் கொண்டான். தனது வலிமையால் இடி முழக்கம், மின்னல், மழை, புயல் என்பவற்றை ஏவினான். மேகம் கறுத்தது. மின்னல் 'பளீர் பளீர்' என்று மின்னியது. ''டும், டும்'' என்று இடி முழங்கியது. கல் மழை பொழிந்தது. புயல் வீசியது. மரங்கள் முறிந்தன. வீடுகள் சாய்ந்தன. மிருகங்கள், பறவைகள் தத்தளித்தன. ஆயர்கள் அவலப்பட்டார்கள்.உலகம் அழிந்துவிடுமோ என்று அவர்கள் அஞ்சினார்கள்.

இந்த அவல நிலையைக் கண்ணன் கண்டான். கோவர்த்தன மலையைப் பெயர்த்தான். அதைத் தூக்கிக் குடையாகப் பிடித்தான். எல்லோரும் அந்தக் குடையின்கீழ் ஒதுங்கினார்கள். இறைவனுடைய சக்தியை இந்திரன் உணர்ந்தான். அவனுடைய கர்வம் அடங்கியது. தனது பிழையை நினைத்து கண்ணனைப் பணிந்தான்.

**மழைக்கு மலை பிடித்த**
**மாயவனைப் போற்றுவோம்!**

## பயிற்சி


**விடை எழுதுவோம்.**

1. ஆயர்கள் பசுக்களை எங்கு மேய்ப்பார்கள்?
2. மழைக்குக் கடவுள் யார்?
3. இந்திரன், கர்வம் கொள்ளக் காரணம் யாது?
4. கண்ணன் குடையாகப் பிடித்த மலை யாது?
5. 'மலை குடையானது' கதையின் மூலம் நீங்கள் பெறும் படிப்பினை யாது?

## செயற்பாடு

கண்ணன் கதைகளைத் தேடி அறிவோம்.

# 7 தைப்பொங்கல்



'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது ஆன்றோர் வாக்கு. தை மாதத்தின் முதல் நாளன்று தைப்பொங்கல் பண்டிகை கொண்டா டப்படுகிறது. தைத்திருநாள், உழவர் திருநாள் என்னும் பெயர்களாலும் அப்பண்டிகை சுட்டப்படுகிறது.

சூரியன், உலகின் இயக்கத்துக்கு ஆதாரமாக உள்ளது. விசேடமாக உழவுத் தொழிலுக்கு உறுதுணை செய்கிறது. அத்தகைய சூரியனுக்கு நன்றி செலுத்தும் நாளாக, தைப்பொங்கல் பண்டிகை அமைகிறது.

தைப்பொங்கல் என்றாலே எல்லோருக்கும் மகிழ்ச்சி!

தைப்பொங்கல் தினத்திற்கு முதல் நாள், வீட்டையும் சூழலையும் சுத்தம் செய்வோம். வீட்டிலுள்ள தேவையற்ற பொருட்களையெல்லாம் தீயிலிட்டு எரிப்போம். அதனைப் போகிப் பண்டிகையாக இந்தியாவில் கொண்டாடுகிறார்கள்.

தைப்பொங்கல் திருநாளன்று எல்லோரும் அதிகாலையில் துயில் எழுந்து நீராடுவோம்; புத்தாடை அணிவோம்; முற்றத்தில் கோலம் இட்டு அலங்கரிப்போம்; வாசலில் மாவிலை, தோரணம் கட்டுவோம்; நிறைகுடம் வைத்து, விளக்கேற்றுவோம்; இஞ்சியிலை, மஞ்சள் இலைகளால் அலங்கரிக்கப்பட்ட புதுப்பானையில் புத்தரிசி இட்டுப் பொங்குவோம்.

பொங்கலுடன் பால், பழம், கரும்பு, இளநீர், பயறு முதலியவற்றையும் சூரிய பகவானுக்குப் படைத்து வழிபடுவோம். குடும்பத்தோடும் சுற்றத்தாரோடும் கூடி உண்டு மகிழ்வோம். பெற்றோரையும் மூத்தோரையும் பணிந்து ஆசி பெறுவோம். அனைவருக்கும் வாழ்த்துத் தெரிவித்து மகிழ்வோம். ஏழை எளியவர்களுக்கு தான தர்மம் செய்வோம்.



தைப் பொங்கல் தினத்திற்கு மறுநாள் பட்டிப் பொங்கல் கொண்டாடப்படுகிறது. இதனை மாட்டுப்பொங்கல் எனவும் அழைப்பர். உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக விளங்கும் பசுக்களுக்கும் எருதுகளுக்கும் நன்றி செலுத்துவதற்காகப் பட்டிப் பொங்கல் கொண்டாடப்படுகின்றது.

நாம் கொண்டாடும் பண்டிகைகள் உயர்ந்த நோக்கங்களைக் கொண்டவையாகும். அவை இறையுணர்வை வளர்த்துக் கொள்ளவும் குடும்பத்தில் ஒற்றுமை உணர்வு, சமூகத்தோடு கூடிவாழும் பண்பு, விருந்தோம்பல் என்பவற்றை மேம்படுத்தவும் வழிவகுக்கின்றன. மகிழ்ச்சியையும் மனநிறைவையும் தருகின்றன.

''தை பிறந்தால் வழி பிறக்கும்''



## பயிற்சி

**விடை எழுதுவோம்.**

1. தைப்பொங்கலை வேறு எப்பெயர்களால் அழைப்பர்?
2. தைப்பொங்கல் கொண்டாடப்படுவதன் நோக்கம் யாது?
3. போகிப் பண்டிகை எவ்வாறு கொண்டாடப்படுகிறது?
4. சூரியபகவானுக்கு, பொங்கலுடன் வேறு எவற்றைப் படைப் போம்?
5. பட்டிப்பொங்கல் ஏன் கொண்டாடப்படுகிறது?
6. பண்டிகைகளைக் கொண்டாடுவதன்மூலம் ஏற்படும் நன்மைகள் எவை?

## செயற்பாடு

வகுப்பறையில் தைப்பொங்கல் பண்டிகையை செய்து காட்டி மகிழ்வோம்.

# 8 தந்தைக்கு உபதேசம்



முருகப்பெருமான், கைலைமலைப் பக்கத்தில் விளையாடிக் கொண்டிருந்தார். பிரமதேவர், அந்த வழியால் வந்தார். சிறு பிள்ளை

தானே என்று முருகப் பெருமானைப் பொருட்படுத்தாமல் சென்றார். முருகப்பெருமான், அவரைச் சோதிக்க நினைத்தார். பிரமதேவனை அழைத்து ''நீர் யார்?'' என்று வினவினார்.

"நான் பிரமன்; படைத்தல் தொழில் செய்கிறேன்" என்று பிரம்மன் பெருமையாகக் கூறினார்.

முருகப்பெருமான் அவரைப் பார்த்து ''என்ன படித்திருக்கிறீர்?'' என்று கேட்டார்.

பிரமதேவர் ''நான் வேதம் படித்திருக்கிறேன்'' என்று கூறினார்.

''எங்கே வேதத்தை ஓதுங்கள் பார்க்கலாம்!'' என்றார் முருகக் கடவுள்.

பிரமதேவர் 'ஓம்' என்னும் பிரணவ மந்திரத்தை உச்சரித்து வேதம் ஓதத் தொடங்கினார்.

முருகக்கடவுள் அவரைப் பார்த்து ''ஓம் என்பதன் பொருள் என்ன?'' என்றார்.

பிரமதேவர் பொருள் தெரியாதவராய்த் தயங்கினார்.

முருகப்பெருமான் பிரமதேவரின் தலையில் குட்டி அவரைச் சிறை வைத்தார்.

தேவர்கள் நடந்ததை அறிந்தார்கள். சிவபெருமானிடம் சென்று முறையிட்டார்கள். சிவபெருமான் முருகக்கடவுளிடம் வந்தார்; பிரமதேவரைச் சிறையில் அடைத்த காரணத்தைக் கேட்டார்.

அதற்கு முருகப்பெருமான், ''பிரம தேவருக்கு பிரணவத்தின் பொருள் தெரியவில்லை. அதனால் நான் அவரைச் சிறையிலிட்டேன்'' என்றார். சிவபெருமான், ''பிரமதேவர் பாவம், அவரை விடுதலை செய்'' என்றார். முருகப்பெருமான் பிரமதேவரை விடுதலை செய்தார்.



சிவபெருமான் முருகப்பெருமானை நோக்கி ''உனக்கு பிரணவத்தின் பொருள் தெரியுமா?'' என்று கேட்டார். முருகக்கடவுள் புன்னகையுடன் தலையசைத்தார். ''எனக்கு அதன் பொருளைக் கூறு பார்க்கலாம்'' என்றார் சிவபெருமான். முருகக்கடவுள் ''அப்படியானால் நீங்கள் எனக்கு சீடன் ஆகவேண்டும். நான் குருவாக இருந்து உபதேசம் செய்கிறேன்'' என்றார். இறைவனும் அவ்வாறே சீடராகி பணிவோடு நின்றார். முருகக்கடவுள் குருவாக அமர்ந்து தந்தைக்கு உபதேசம் செய்தார். சுவாமிக்கு உபதேசம் செய்ததால் முருகன் சுவாமிநாதன் ஆனார்.

குருவைப் பணிவோம்!

அறிவினைப் பெறுவோம்!

## பயிற்சி

**1. கோட்டில் பொருத்தமான சொல்லை எழுதுவோம்.**

1. படைத்தற் கடவுள் ______________________
2. பிரணவ மந்திரம் ______________________
3. முருகனின் சீடரானவர் ______________________
4. சுவாமிநாதன் ______________________
5. பிரமதேவரை சிறையிலடைத்தவர் ______________________
6. சிவபெருமானிடம் முறையிட்டவர்கள் ______________________

**2. விடை எழுதுவோம்.**

1. முருகப்பெருமான் பிரமதேவரை சிறையில் அடைத்தமைக்கான காரணம் யாது?
2. முருகப்பெருமான், சுவாமிநாதன் என்ற பெயரைப் பெற்றமைக் கான காரணம் யாது?

## செயற்பாடு

'தந்தைக்கு உபதேசம்' கதையை நாடகமாக நடிப்போம்.

# 9 நகுலேஸ்வரம்



திருமூலரால் ‘சிவபூமி’ என்று போற்றப் பெற்றது இலங்கை. அதன் வடபகுதியில் விளங்குவது யாழ்ப்பாணக் குடாநாடு. யாழ்ப்பாணத்தின் வடபகுதியில் கடற்கரை ஓரமாக விளங்குவது கீரிமலை எனும் கிராமம். அங்குள்ள புராதன சிவாலயமே நகுலேஸ்வரம் ஆகும்.

இத்திருத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றும் அமையப் பெற்ற சிறப்பு வாய்ந்தது. திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்று இத்திருத்தலமும் மிகவும் பழமை வாய்ந்தது. புராதன காலத்தில் இவ்வாலயம் திருத்தம்பலேஸ்வரம் எனும் பெயரால் அழைக்கப்பட்டது.

புராதன பெருமை வாய்ந்த இத்திருத்தலத்தில் இறைவன் நகுலேஸ்வரர் எனும் பெயரில் வீற்றிருந்து அருள்பாலிக்கிறார். அம்பிகையின் நாமம் நகுலாம்பிகை என்பதாகும்.

இத்தலம் கீரிமலை(நகுலகிரி) என்று பெயர் பெற்றமை தொடர்பாக ஒரு ஐதிகம் நிலவுகிறது:

முற்காலத்தில் முனிவர் ஒருவரின் முகம், பிதிர்சாபத்தினால் கீரி முகமாக மாறியது. அதனால் அவர் நகுலமுனி எனப்பட்டார் (நகுலம்-கீரி). எத்தனையோ பரிகாரங்கள் செய்தும் பழைய உருவை அவரால் அடைய முடியவில்லை. நகுலேஸ்வரப் பெருமானை வணங்கி ஆலயத்திற்கு அருகில் உள்ள தீர்த்தத்தில் நீராடிவந்தார். அதனால் அவரது கீரிமுகம் நீங்கிப் பழைய உரு கிட்டியது. முனிவரின் கீரிமுகம் நீங்கியதால் இத்தலம் கீரிமலை (நகுலகிரி) என்று பெயர் பெற்றது.



இன்றும் நோயுற்றவர் தம் நோய் தணிக்க இத்தலத்தின் புனித தீர்த்தத்தில் நீராடிப் பயனடைவது கண்கூடு. கீரிமலைத் தீர்த்தக்

கரையோரத்தில் பிதிர்க்கடன் (இறந்தவர்களுக்காகச் செய்யும் கிரியை) நிறைவேற்றும் வழக்கம் இன்றுவரை தொடர்கிறது. அங்கு ஆடி அமாவாசையின்போது, பிதிர்க்கடன் செலுத்துவதற்காக பெருந்தொகையான அடியார்கள் கூடுகின்றனர்.

மாசிமாதம் மகாசிவராத்திரியைத் தீர்த்த நாளாகக் கொண்டு, பதினைந்து தினங்கள் ஆலய மகோற்சவம் நடைபெறுகிறது. இவ்வாலயச் சூழலில் கடற்கரைப் பிள்ளையார், மாரியம்மன் கோயில், காசி விசுவநாதர் கோயில் எனப் பல ஆலயங்கள் உள்ளன. மடங்களும் அமையப்பெற்றுள்ளன. அங்கு அன்னதானம், புராணபடனம் முதலான திருப்பணிகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தலம் - கோயில் பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

சடையாய் எனுமால் சரண் நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுள் மெலிவே

திருச்சிற்றம்பலம்


நகுலேஸ்வரரை வழிபடுவோம்;
நலம் மிகப் பெறுவோம்!

## பயிற்சி

**நகுலேஸ்வரம் தொடர்பான விபரங்களை எழுதுவோம்.**

1. புராதன பெயர் ________________

2. அமைவிடம் ________________



3. இறைவன் ________________

4. இறைவி ________________

5. தீர்த்தம் ________________

6. சிறப்பான தினம் ________________

7. தீர்த்தநாள் ________________

8. சாபம் நீங்கிய முனிவர் ________________

### செயற்பாடு

'சடையாய் எனுமால்' தேவாரத்தைப் பண்ணுடன் பாடுவோம்.

# 10 அறுகம்புல்லின் சிறப்பு



விநாயகப்பெருமானை வழிபட்டுத் தொடங்கும் எந்த ஒரு காரியமும் இனிதே நிறைவேறும். அதனால் விநாயகர் முதல் வணக்கத்திற்கு உரிய கடவுள் ஆகிறார். விநாயகப் பெருமான் மிகவும் எளிமையான முறையில் வணங்கத்தக்கவர். குளக்கரை, அரசமரத்தடி, தெருச்சந்திகள் என்று பொதுமக்கள் கூடும் இடங்களில் எல்லாம் விநாயகர் வீற்றிருக்கிறார்.

விநாயகரை வழிபடுவதற்கு கல்லாலோ, உலோகத்தாலோ ஆன விக்கிரகங்கள் அத்தியாவசியமில்லை. சாதாரணமாகக் கிடைக்கும்

மண்ணையோ பசுஞ்சாணத்தையோ மஞ்சளையோ திரட்டி அதில் விநாயகரை எழுந்தருளச்செய்து வழிபடலாம்.

எங்கும் எளிமையாகக் கிடைக்ககூடிய அறுகம்புல், விநாயகப் பெருமானை அர்ச்சிக்கச் சிறந்ததாகும். அறுகம்புல்லின் இலை, தண்டு, வேர் எல்லாமே மருத்துவகுணம் மிக்கவை.

அறுகம்புல் இலகுவாக அழிக்கமுடியாத தன்மை உடையது. அதாவது நிலைத்து வாழ்வது. அதனாலயே மணமக்களை வாழ்த்தும் போது, ''ஆல்போல் தழைத்து, அறுகுபோல் வேரூன்றி வாழ்க!'' என வாழ்த்துகிறார்கள்.

அறுகம்புல்லின் தெய்விகத் தன்மையை பின்வரும் கதை விளக்குகின்றது.

மிதிலாபுரியை ஜனகமகாராசன் ஆட்சி புரிந்தான். அவன் நல்லியல்புகள் கொண்டவன்; விநாயகப் பெருமானைப் பக்தியுடன் நாள்தோறும் வணங்குபவன். எனினும் பக்தியில் தன்னைவிட மேலானவர் யாரும் இல்லை என்ற அகந்தை அவன் மனத்திலே குடிகொண்டிருந்தது.

விநாயகப் பெருமான், ஜனகமகாராசனின் அகந்தையை நீக்கி அவனை நல்வழிப்படுத்தத் திருவுளங்கொண்டார். பெருநோய் கொண்ட ஏழை அந்தணர் வடிவம் தாங்கி ஜனகமகாராசனின் அரண்மனையை அடைந்தார். அவனிடம் ''என் பசியைப் போக்க வேண்டும்'' என இரந்தார்.

ஜனகமகாராசன் வியப்புற்றான். அரசர்க்கெல்லாம் அரச னான என்னிடம் பசிக்காக யாசகம் கேட்டு வந்திருக்கிறாரே என ஏளனமாக எண்ணினான். அந்தணருக்கு, வேண்டிய அளவு உணவு பரிமாறக் கட்டளை இட்டான். இட்ட உணவை எல்லாம் அந்தணர் ஒருகணப்பொழுதில் உண்டு முடித்தார். அவர் உண்ண உண்ண பரிசாரகர்கள் உணவு பரிமாறிய வண்ணம் இருந்தனர்.

அரண்மனையில் இருந்த உணவுப் பொருள்கள் எல்லாம் தீர்ந்து போயின. ஆனால் அந்தணரின் பசி தீர்ந்தபாடில்லை. ஊர் மக்க ளிடமிருந்த உணவுப் பொருள்களையும் கொண்டுவந்து கொடுத்தனர். அவற்றை உண்டபின்பும் அந்தணர் ''பசி! பசி!'' என்று பரிதவித்தார்.

ஜனகமகாராசனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ''என்னால் ஓர் ஏழை அந்தணரின் பசியைக்கூடப் போக்க முடிய வில்லையே'' என வெட்கித் தலைகுனிந்தான். இது இறைவனின் செயல் என்று உணர்ந்தான். அகந்தையை விட்டொழித்தான். அந்தணரைப் பணிந்து, ''ஐயரே, உங்கள் பசி தீர ஏற்ற இடத்தை நாடிச் செல்லுங்கள்'' எனக் கூறினான்.

அரண்மனையை விட்டு அகன்ற அந்தணர், திரிசுரன் என்னும் ஏழையின் குடிசைக்குச் சென்றார். திரிசுரனும் அவனது மனைவி விரோச னையும் அந்தணரை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். ''அன்பனே, என் பசி யைப் போக்க அரண்மனைக்குச் சென்றேன். அரசன் கொடுத்த உணவு எனக்குப் போதவில்லை. அதனால் உன்னை நாடி வந்தேன்'' என்றார் அந்தணர். அதைக் கேட்டு அவர்கள் ஆச்சரியம் அடைந்தார்கள்.

''இப்போது எங்களிடம் இருப்பதெல்லாம் விநாயகருக்குப் பூசைசெய்து வைத்திருக்கும் அறுகம்புல்லே'' என்று திரிசுரனும் விரோசனையும் கூறினர். அதனைக் கேட்ட அந்தணர், ''ஆணவத்தோடு கொடுக்கும் கோடி பொன்னைவிட அன்போடு கொடுக்கும் சிறு பொருளே எனக்கு உவப்பானது. அதனால் அறுகம்புல்லையே கொடுங்கள்'' என்றார். விரோசனை, அறுகம்புல்லை அந்தணரிடம் கொடுத்தாள். அந்தணர் அதை வாயிலிட்டு மென்று விழுங்கினார். அவரின் வயிறு நிறைந்தது; பசி தணிந்தது.

அந்தக்கணமே திரிசுரனுடைய குடிசை மாளிகையாயிற்று; செல்வங்களால் நிறைந்தது. திரிசுரனும் மனைவி விரோசனையும் அதிசயித்தனர்; அந்தணரைப் போற்றிப் பணிந்தனர். அந்தணராக வந்த விநாயகப்பெருமான் அவர்களுக்கு காட்சி கொடுத்தருளினார்.

அதே சமயம் மிதிலாபுரியில் அரண்மனையிலும் அனைவரது வீட்டிலும் செல்வம் செழித்தது. ஜனக மகாராசன், நடந்தவற்றை அறிந்தான். அகந்தையோடு வழங்கப்பட்ட அரண்மனை உணவை விட அன்போடு வழங்கப்பட்ட அறுகம்புல் உயர்வானது என உணர்ந்தான். தனது அகந்தையை நீக்கி நல்வழிப்படுத்தவே விநாயகப் பெருமான், இவ்வாறு திருவிளையாடல் புரிந்தார் என உணர்ந்தான்; விநாயகரைப் போற்றித் துதித்தான்.

உள்ளக் கமலமடி

உத்தமனார் வேண்டுவது!

## பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**

1. விநாயகப் பெருமான் வீற்றிருக்கும் இடங்கள் எவை?

   ____________ , ____________ , ____________

2. விநாயகர் உருவஞ் செய்யப் பயன்படும் பொருள்கள் எவை?

   ____________ , ____________ , ____________

3. அறுகம்புல்லின் எப்பகுதிகள், மருத்துவ குணம் மிக்கவை?

   ____________ , ____________ , ____________

4. மிதிலாபுரி அரசன் யார்? ____________ அவனிடம் அந்தணராகச் சென்றவர் யார்? ____________

5. அந்தணரின் பசியைப் போக்கியவர்கள் யாவர்? __________ , ____________ அவர்கள் எதனைப் படைத்துப் பசியைப் போக்கினர்? ____________

## செயற்பாடு

குழுக்களாக, பிள்ளையார் பற்றிய கதைகளைத் தேடிச் சமர்ப்பிப்போம்.



# 11 காரைக்கால் அம்மையார்



காரைக்கால் என்ற ஊரில், பரமதத்தன் என்பவன் பெரு வணிகனாய் விளங்கினான். அவனுக்கு ஒரு பெண்குழந்தை பிறந்தது. குழந்தைக்குப் புனிதவதி என்று பெயர் சூட்டினர்.

புனிதவதி சிவபக்தி உடையவளாய் வளர்ந்துவந்தாள். சிவனடி யார்களை உபசரிப்பதில் பெருமகிழ்ச்சி கொண்டாள். புனிதவதி மணப்பருவம் எய்தினாள்.

அவளுக்கு, நாகபட்டினம் என்ற ஊரைச் சேர்ந்த தனதத்தனை மணம்பேசி முடித்தனர். வெகு விமரிசையாகத் திருமணம் நடந்து

முடிந்தது. மகளைப் பிரிய வேண்டுமே என்று பரமதத்தனும் மனைவியும் கவலைப்பட்டனர். அதனால் காரைக்காலிலேயே தனிவீடு அமைத்து அவர்களைக் குடியமர்த்தினர்.

புனிதவதியாரின் கணவனான தனதத்தனும் சிறந்த வணிக னாவான். ஒருநாள் வழமைபோல அவன் தன் கடைக்குச் சென்று விட்டான்.

தனதத்தனின் கடைக்கு வந்த ஒருவர், இரண்டு மாம்பழங்களை அவனுக்குக் கொடுத்தார். தனதத்தன், வேலையாள்மூலம் அந்த மாம் பழங்களை வீட்டிற்கு அனுப்பிவைத்தான்.

புனிதவதி மாம்பழங்களை வாங்கி வைத்துவிட்டு, சமையலில் ஈடுபட்டாள். அவ்வேளை சிவனடியார் ஒருவர், புனிதவதியின் இல்லத் திற்கு வந்தார். தனக்கு மிகவும் பசிப்பதாகக் கூறினார். சோறு மட்டுமே அப்போது தயாராக இருந்தது. சிவனடியாருக்கு உணவு வழங்க கறி சமைக்கவில்லையே என புனிதவதி கவலைப்பட்டாள். என்ன செய்வதென யோசித்த புனிதவதி, கணவன் அனுப்பிய மாம்பழங்களில் ஒன்றை சோற்றுடன் படைத்தாள். பசியாறிய சிவனடியார் புனிதவதியை ஆசீர்வதித்துச் சென்றார்.

மதியவேளை ஆனதும் தனதத்தன் பசியுடன் வீட்டுக்கு வந்தான். கணவனுக்கு அறுசுவை விருந்திட்டாள் புனிதவதி. உணவு உண்ட பின், மீதமிருந்த மற்றைய மாம்பழத்தை அவனுக்குப் பரிமாறினாள். அதன் சுவை கண்ட தனதத்தன், இரண்டாவது மாம்பழத்தையும் கொண்டு வருமாறு கூறினான்.

புனிதவதி செய்வதறியாது திகைத்தாள். உள்ளே சென்று இறைவனைத் தியானித்தாள். இறை அருளால் அவளது கைகளில் மாம்பழம் ஒன்று வந்தது. அதனைக் கொண்டுவந்து கணவனிடம் கொடுத்தாள். அம் மாம்பழம், முன்னையதைவிட அதிக சுவை உடையதாய் இருந்ததை தனதத்தன் உணர்ந்தான். ''இது யார் தந்த மாம்பழம்?'' எனக் கேட்டான்.

நடந்த யாவற்றையும் புனிதவதி கூறினாள். தனதத்தன் அவள் கூறியதை நம்பவில்லை. ''இறைவன் தந்ததாயின் இன்னொரு மாம்பழத்தைப் பெற்றுக் காட்டு'' என்றான். புனிதவதி இறைவனைப் பிரார்த்தித்தாள். அவளது கையில் மீண்டும் ஒரு மாம்பழம் தோன்றியது.

புனிதவதி தெய்வப் பெண்ணோ எனத் தனதத்தன் பயந்தான். அவளை விட்டு மெல்ல விலகிநடக்கத் தொடங்கினான். வியாபாரத் திற்காக வேற்றூர் செல்வதாகக் கூறி, அவளைப் பிரிந்து சென்றான். நாட்கள் கடந்தன. தனதத்தன் வீடு திரும்பவில்லை. புனிதவதி கணவனுக்காகக் காத்திருந்தாள். தனதத்தனைத் தேடிச் சென்ற உறவினர்கள், அவன் பாண்டி நாட்டிலிருப்பதை அறிந்தனர்.

பெற்றோரும் உறவினரும் புனிதவதியைப் பாண்டி நாட்டிற்கு அழைத்துச் சென்றனர். புனிதவதியை கண்ட தனதத்தன் அவளது காலில் விழுந்து வணங்கினான். தான் புதிதாக திருமணம் செய்திருந்த பெண்ணையும் பெற்ற பிள்ளையையும் புனிதவதியை வணங்கச் செய்தான்.

கணவன் தன் காலில் விழுந்ததைக் கண்ட புனிதவதி திகைத்தாள். இதுவரை பேணிய அழகிய உடலை வெறுத்தாள். இறைவனிடம் பேயுருவம் வேண்டிப் பெற்றாள். புனிதவதியை காரைக்கால் அம்மையார் என உலகம் போற்றத் தொடங்கியது.

காரைக்கால் அம்மையார் இறைவனைத் துதித்துப் பல பாடல்கள் பாடினார். இறைவன் வாழும் கைலாயமலைத் தரிசிக்க விருப்பம் கொண்டார். பல துன்பங்களுக்கு மத்தியில் கைலாயத்தை அடைந்தார். இறைவன் வாழும் இடமாகையால் கைலையை மிதிப்பது தவறு என நினைத்தார். தலையால் நடந்து கைலாயத்தில் ஏறினார்.

அப்போது சிவபெருமான், ''அம்மையே யாது வேண்டும்?'' எனக் கேட்டார். ''உனது திருநடனக் காட்சியைக் காண வேண்டும்'' என அம்மையார் பதிலளித்தார். அதனைக் காண்பதற்கு திருவாலங்காடு செல்லுமாறு இறைவன் அவரைப் பணித்தான்.

அம்மையார் திருவாலங்காட்டிற்குச் சென்றார்; இறைவனின் திருநடனத்தைக் கண்டு பதிகம் பாடி மகிழ்ந்தார். இறைவனது திருவடிக் கீழ் இருக்கும் பேறு பெற்றார்.

**அடியாரை வழிபட்ட**
**அம்மையைப் பணிவோம்!**

## பயிற்சி

**சரியான விடையைத் தெரிவு செய்வோம்.**

1. புனிதவதி பிறந்த ஊர்.

   i. காரைக்கால்     ii. நாகபட்டினம்

2. பரமதத்தனின் தொழில்.

   i. வைத்தியம்     ii. வணிகம்

3. பரமதத்தனுக்குக் கிடைத்த பழம்.

   i. பலாப்பழம்     ii. மாம்பழம்

4. புனிதவதி வீட்டிற்குப் பசியுடன் வந்த விருந்தினர்.

   i. சிவனடியார்     ii. வேலையாள்

5. புனிதவதி தலையால் நடந்து சென்ற மலை.

   i.கைலாயமலை     ii. பொதிகை மலை

6. சிவபெருமானின் திருநடனத்தைக் காரைக்கால் அம்மையார் கண்டு களித்த இடம்.

   i. திருமறைக்காடு     ii. திருவாலங்காடு

## செயற்பாடு

காரைக்கால் அம்மையார் கதையை நாடகமாக நடிப்போம்.

# 12 பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

தலம் - திருக்கழுமலம் (சீர்காழி) பண் - கொல்லி

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவிலை
கண்ணில் நல் அஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.

- திருஞானசம்பந்தர்

## திருவாசகம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனை
பத்திநெறி அறிவித்து பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்து சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன் எனக்கு அருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே.

- மாணிக்கவாசகர்

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடு அரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்து உகந்தாயை
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

- திருமாளிகைத்தேவர்

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

- சேந்தனார்

## திருப்புராணம்

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகி
சோதியாய் உணர்வும் ஆகி தோன்றிய பொருளும் ஆகி
பேதியா ஏகம் ஆகி பெண்ணுமாய் ஆணும் ஆகி
போதியாநிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி! போற்றி!

- சேக்கிழார்

பஞ்சபுராணம் ஓதுவோம்;
பக்தியுடன் வழிபடுவோம்.

## பயிற்சி

I. **சுருக்கமான விடை எழுதுவோம்.**

1. பஞ்சபுராணத்துள் அடங்குபவை எவை?
2. 'திருச்சிற்றம்பலம்' எப்போது ஓதவேண்டும்? ஏன் ஓத வேண்டும்?
3. திருப்பல்லாண்டுப் பாடல்களில் இறுதியில் இடம்பெறும் தொடர் யாது?
4. இங்கு திருப்புராணம் எனப்படும் புராணம் எது?

II. **அட்டவணையைப் பூர்த்தி செய்வோம்.**

| பதிகம் | பாடியவர் |
|---|---|
| ''மண்ணில் நல்ல...'' | |
| ''முந்திநெறி...'' | |
| ''ஒளிவளர்...'' | |
| ''பாலுக்குப் பாலகன்...'' | |
| ''ஆதியாய்...'' | |

## செயற்பாடு

பஞ்சபுராணத்தை வரிக்கிரமமாக எழுதுவோம்; பண்ணோடு ஓதுவோம்.

# 13 நரிகள் பரிகளாயின



திருவாதவூரர், பாண்டிய மன்னரின் முதலமைச்சராக விளங்கினார். அவர் சிவபெருமானிடத்தில் மிகுந்த பக்தி உடையவர். எனினும் தனது அரச கடமைகளைச் செவ்வனே செய்துவந்தார்.


தனது படையில் குதிரைகள் குறைந்துவிட்டதாக மன்னன் கருதினான்; திருவாதவூரரிடம் பொன் கொடுத்துக் குதிரைகள் வாங்கி வருமாறு அவரை அனுப்பினான்.

குதிரை வாங்குவதற்காக சென்ற திருவாதவூரர் வழியில் திருப்பெருந்துறை என்ற ஊரை அடைந்தார். அங்கு ஒரு குருந்தமர நீழலில் சிவப்பொலிவோடு குருநாதர் ஒருவர் இருந்தார். அவரைச் சூழ சீடரான அடியார் பலர் இருந்தனர். அவர்கள் ஓதிய வேத ஒலி திருவாதவூரரது காதில் விழுந்தது.

திருவாதவூரர் தம்மையறியாது வேத ஒலி வந்த திசை நோக்கி நடந்தார்; குருநாதரைக் கண்டார்; தம்மை மறந்தார்; குருநாதருக் குச் சீடரானர்; அடியார் கூட்டத்துள் கலந்தார்; அரசன் கொடுத்த பொருள் முழுவதையும் அன்னதானத்திலும் வேறு திருப்பணிகளிலும் செலவிட்டார்; சிவப்பணிக்கே தன்னை முழுமையாக அர்ப்பணித்தார்.

குதிரை வாங்கச் சென்ற திருவாதவூரரை இன்னும் காணவில் லையே என்று அரசன் யோசித்தான். அவரைத் தேடி உடனடியாக அழைத்து வருமாறு சேவகர்களுக்குக் கட்டளை இட்டான். தேடிச் சென்ற சேவகர்கள் திருப்பெருந்துறையில் திருவாதவூரரைக் கண்டனர். அரசனுடைய கட்டளையைத் தெரிவித்தனர். திருவாதவூரர் குருநாதரிடம் தனது நிலைமையைத் தெரிவித்தார். அரசனிடம் சென்று ''ஆவணிமாத மூல நட்சத்திர நாளில் குதிரைகள் வந்து சேரும்'' என்று அறிவிக்குமாறு குருநாதர் திருவாய் மலர்ந்தார்.

ஆவணி மூலநாள் வந்தது. ஆனால் குதிரைகள் வரவில்லை. ''குதிரைகள் எங்கே?'' என திருவாதவூரரிடம் மன்னன் கோபத்தோடு வினவினான். திருவாதவூரர் இறைவனிடம் முறையிட்டார். தன் அடியவருக்காக இறைவன் இரங்கினார். இறைவனின் திருவிளையாட லால் காட்டிலுள்ள நரிகள் குதிரைகளாயின; பூதகணங்கள் குதிரை வீரர்களாயின; சிவபெருமான் குதிரைவீரர் தலைவரானார்; குதிரைகள் சூழவர பாண்டி நாட்டுக்கு வந்தார்; வாதவூரருக்குக் கொடுத்த வாக்கினை நிறைவேற்றினார்.



அழகு மிக்க பல வண்ணக் குதிரைகள், கூட்டம் கூட்டமாக வந்தன. அவற்றைக் கண்டு அரசன் பெருமகிழ்ச்சி கொண்டான். குதிரைவீரர் தலைவர் கம்பீரமாக முன்னே வந்து நின்றார். அவரைக் கண்ட அரசன் பரவசமானான்; தன்னை அறியாமலே ஆசனத்திலிருந்து எழுந்தான்.

குதிரைகள் வந்து சேர்ந்த அன்று நள்ளிரவு எல்லோரும் உறக்கத்திலிருந்தனர். புதிதாக வந்த குதிரைகள் மீண்டும் நரிகளாயின. குதிரைச் சாலையில் நின்ற பழைய குதிரைகளைக் கடித்தன; நாலாபக்கமும் சிதறி ஓடின; ஊளையிட்டன.

சத்தம் கேட்ட அரசன் நித்திரையிலிருந்து எழுந்தான்; நடப்பவற்றைக் கண்டான்; கடுங்கோபம் கொண்டான்; திருவாதவூரரைப் பிடித்துச் சிறையில் அடைத்தான்.

திருவாதவூரர் சிவபெருமானை நினைந்தார். சிவபெருமான் அவருக்கு அருள்புரியத் திருவுளங் கொண்டார். பாண்டிநாடே மூழ்கும்படியாக வைகைநதியைப் பெருக்கெடுத்து ஓடச் செய்தார். சிவனடியாரான வாதவூரரை வருத்தியமையாலேயே தன் நாட்டுக்கு இந்த அழிவு நேர்ந்தது என்று அரசன் உணர்ந்தான். வாதவூரரைச் சிறையிலிருந்து விடுவித்தான்.

**கடவுளை நம்பினோர்**
**கைவிடப்படார்!**

## பயிற்சி

**பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புவோம்.**

1. திருவாதவூர் பாண்டிய மன்னனின் ______________________ ஆவார்.

2. திருவாதவூரர் ______________________ என்ற ஊரில் குருந்தமர நிழலில் குருநாதரைக் கண்டார்.

3. ______________________ நாளில் குதிரைகள் வரும் என்று குருநாதர் கூறினார்.

4. ______________________ குதிரை வீரர்களாயின.

5. ______________________ குதிரை வீரர் தலைவரானார்.

6. புதிதாக வந்த குதிரைகள் மீண்டும் ______________________

7. மன்னன் ______________________ சிறையில் அடைத்தான்.


8. சிவபெருமான் ______________________ பெருக்கெடுக்கச் செய்தார்.

9. ______________________ வருத்தியமையால் நாட்டுக்கு அழிவு நேர்ந்தது என அரசன் உணர்ந்தான்.

10. ______________________ திருவாதவூரரை விடுதலை செய்தான்.

## செயற்பாடு

'நரிகள் பரிகளாயின' கதையைக் குழுக்களாக இணைந்து கூறுவோம்.



# 14 திருக்கோயில் வழிபாடு




இறைவன் உறையும் இடம் கோயில். அது மிகவும் புனிதமானது. இறைவனை வழிபடத் திருக்கோயிலுக்குச் செல்லும் நாம் தூய்மையாகச் செல்ல வேண்டும். திருக்கோயிலின் தூய்மையையும் பேணவேண்டும்.

சுவாமி தரிசனஞ் செய்வதற்குச் செல்லும்போது வெறுங்கையோடு செல்லாது தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை, கர்ப்பூரம், பூக்கள் முதலான பூசைத்திரவியங்களைக் கொண்டு செல்லல் நன்று.

கோயிலை அண்மித்ததும் முதலில் கோபுரத்தை வணங்க வேண்டும். அதன் பின்னர், கை, கால் கழுவிச் சுத்தமாக ஆலயத்திற்குள் செல்ல வேண்டும். உள்ளே சென்று பலிபீடத்திற்கு இப்பால் நின்று

பக்தியுடன் வழிபடவேண்டும். ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்ய வேண்டும். ஆலயத்தில் வழிபடும்போது மற்றவர்களுக்கு இடையூறு ஏற்படாதவாறு நடந்து கொள்ள வேண்டும்.



பூசை நிறைவின்பின் கோயிலை வலம் வருதல் வேண்டும். வலம் வரும்போது இறை சிந்தனையோடு இறைவன் திருநாமத்தை உச்சரிக்க வேண்டும். தேவாரம், திருவாசகம் முதலான அருட்பாடல்களை ஓதுவது நன்று. வழிபாட்டின் முடிவில் தரிசன பலனை வேண்டி சண்டேஸ்வரரை வழிபடுதல் வேண்டும்.

வழிபாடு நிறைவுற்றதும் விபூதி, தீர்த்தம், சந்தனம், குங்குமம் முதலிய பிரசாதங்களைப் பெற்று அணிதல் வேண்டும். அப்புனிதப்

பொருட்களை பெறும்போது இடது கையின்மீது வலது கையை வைத்து பணிவோடு பெறுதல் வேண்டும். அவற்றை நிலத்திலோ அல்லது வேறு இடத்திலோ சிந்தாது, தரிக்க வேண்டும்.

கோயிலில் செய்யவேண்டிய தொண்டுகளைச் செய்வதும் வழிபாட்டில் ஓர் அங்கமாகும். கோயிலைத் தூய்மையாக வைத்திருக்க நாம் சரீர உதவி செய்ய வேண்டும். கோயிலைக் கூட்டுவதற்கும், கழுவுவதற்கும் உதவ வேண்டும். திருவிளக்குகள், ஏனைய உபகரணங்க ளைச் சுத்தம் செய்ய உதவுதல் வேண்டும். சுவாமி காவுதல், தீவர்த்தி பிடித்தல், மணியடித்தல் யாவும் கோயிற் பணிகளே.

கோயில் நந்தவனத்தைப் பராமரிப்பதும் நம் கடமையே. பூசைக்கு வேண்டிய மலர்கள் கொய்தும் மாலை தொடுத்தும் தொண்டு புரியலாம்.

இறைவனை நாம் மனம், வாக்கு (சொல்), காயம் (உடல்) ஆகியவற்றால் வழிபடுகிறோம். உடலால் செய்யும் கோயில் தொண்டு கள் சரியைத் தொண்டுகள் எனப்படும். இது இறைவனை வழிபடுவ தற்கான ஒரு வழிமுறையாகும்.

**ஆலயத்தில் அமைதி பேணுவோம்.**
**அதனைத் தூய்மையாக வைத்திருப்போம்.**

## பயிற்சி

I. **சுருக்கமான விடை எழுதுவோம்.**

1. ஆலயத்துக்குச் செல்லும்போது எடுத்துச்செல்ல வேண்டிய பொருள்கள் எவை?
2. ஆண்கள் செய்யும் நமஸ்காரம் எது?
3. பெண்கள் செய்யும் நமஸ்காரம் எது?
4. வழிபாட்டின் முடிவில் வழிபட வேண்டிய தெய்வம் எது?
5. ஆலயத்தில் நாம் செய்யக் கூடிய தொண்டுகள் மூன்று எழுதுக.

II. **அட்டவணையை நிரப்புவோம்.**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | பூசைத் திரவியங்கள் | | | |
| 2 | கோயிற் பிரசாதங்கள் | | | |
| 3 | சரியைத் தொண்டுகள் | | | |

## செயற்பாடு

கோயிலில் தொண்டு செய்வோம்.

# 15 தண்ணளிபுரம்



மட்டக்களப்பு மாநகரில் தமிழ்த்தின விழா நடைபெற்றது. அதில் கலந்துகொள்வதற்காக விநாயகபுரம் மகாவித்தியாலய மாணவர்கள் சென்றிருந்தனர். தண்ணளிபுரம் மத்திய மகாவித்தியாலயத்தில் அவர்கள் தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பஸ்வண்டி தண்ணளி புரத்தினுள் நுழைந்தது. வீதியின் இருபுறமும் நிழல்தரு மரங்கள் வரிசையாக நின்று அவர்களை வரவேற்றன. எங்கும் பசுமை, குளிர்ச்சி. புதிய உலகம் ஒன்றிற்குள் செல்வதுபோல் மாணவர்கள் உணர்ந்தார்கள்.

தண்ணளிபுரம் மத்திய மகாவித்தியாலயம் இயற்கை எழில் நிறைந்த சூழலில் கம்பீரமாகக் காட்சியளித்தது. பாடசாலை அதிபரும் ஆசிரியர்கள் சிலரும் மாணவர்களை அன்போடு வரவேற்றனர்; மாணவர்கள் பசியாறவும் தங்குவதற்கும் உரிய ஒழுங்குகளை செய்து கொடுத்தனர். மாணவர்கள் பாடசாலையைச் சுற்றிப் பார்க்க விரும்பினர். அதிபர் அவர்களை அழைத்துச் சென்றார்.

***அதிபர்*** - *பிள்ளைகளே! தண்ணளிபுரம் உங்களுக்குப் பிடித் திருக்கின்றதா?*

***அகிலன்*** - *ஐயா! எமக்கு ஒரே பிரமிப்பாக இருக்கிறது. இந்தக் கிராமம், பாடசாலை என்று எங்கு பார்த்தாலும் ஒரே சோலையாக இருக்கின்றது. இது எப்படிச் சாத்தியமானது?*

***பூரணி*** - *நாமும் இங்கேயே தங்கிவிட வேண்டும் போல இருக்கின்றது.*

***அதிபர்*** - *நீங்கள் உங்கள் கிராமத்தையும் இப்படி மாற்றமுடியும். மனமுண்டானால் இடம் உண்டு அல்லவா!*

***அகிலன்*** - *ஆம், நாமும் மரங்கள் நாட்டவேண்டும்.*

***அதிபர்*** - *இயற்கையோடு இணைந்த வாழ்க்கைதான் நம் மனதுக்கு நிறைவைத் தரும். மரங்கள் இறைவன் தந்த இயற்கை வரம். மரங்கள் இல்லாவிடின் மனிதன் வாழமுடியாது. எமது மூதாதையர் மரங்களை நாட்டி வைத்தனர். அவற்றின்*

பயனையே நாம் அனுபவிக்கிறோம். நமது அடுத்த தலைமுறையினர் நல்லபடி வாழ வேண்டும். அதற்காக நாமும் மரங்களை நடுகிறோம்; பராமரிக்கிறோம். இந்தக் கிராமத்தில் வாழும் ஒவ்வொருவரும் இயற்கையின் பெறுமதியை நன்கு உணர்ந்தவர்கள். அதனால் கிராமமே பெயருக்கேற்ப 'தண்ணளி' செய்கிறது.

**பூரணி** - *தண்ணளி என்றால்?*

**அதிபர்** - இரக்கம், குளிர்ச்சி, அன்பு என்றெல்லாம் பொருள் படும். உலகம் முழுவதையும் குளிர்ச்சியாக வைத்திருக்க வேண்டும். இரக்கம் உள்ளவர்கள் அதற்கு முயற்சி செய்வார்கள். ஒவ்வொருவரும் தத்தமது வீட்டையும் சூழலையும் குளிர்ச்சியாக வைத்திருந்தால் உலகமே குளிர்ச்சியாகிவிடும்.



**அமிர்தன்** - ஆ! என்ன அழகு! மா, பலா, கொய்யா, மாதுளை, பப்பாசி, வாழை எல்லா மரங்களும் இங்குண்டு.

**அதிபர்** - இது பயன்தரு மரங்கள் உள்ள நிலப்பரப்பு. தரம் 10, 11 மாணவர்கள் இயற்கைப் பசளையிட்டு நீரூற்றிப் பராமரிக்கிறார்கள்.

**பூரணி** - அதோ அழகிய மலர்த்தோட்டம்!

**அதிபர்** - ஆம், ரோஜா, மல்லிகை, முல்லை, நித்திய கல்யாணி, செம்பருத்தி என்று மனதைக் கவரும் செடிகள். தரம் 6, 7 மாணவர்கள் இவற்றைப் பராமரிக்கிறார்கள். எமது பாடசாலை ஆலயத்துக்குரிய நந்தவனம் இது. மூலிகைச் செடிகள் கூட இங்கே உள்ளன.

**அகிலன்** - ஆம் அதோ அறுகு, தூதுவளை, கர்ப்பூரவள்ளி, துளசி, கற்றாழை!

**அதிபர்** - இவை நமது இயற்கை மருந்து. 8 ஆம் 9 ஆம் வகுப்பு மாணவர்கள் பொறுப்பில் இச்செடிகள் வளர்கின்றன. அதோ அங்கு காய்கறித் தோட்டமும் உண்டு. ஆரம்ப வகுப்பு மாணவர்களும் உயர்தர மாணவர்களும் இணைந்து அவற்றைப் பராமரிக்கின்றார்கள்.
தம்மையே நமக்காக அர்ப்பணிக்கும் மரங்களை நாம் அழிக்க நினைக்கவே கூடாது. எம்மால் இயன்றவரை

மரங்களை நடவேண்டும். நீங்கள் எல்லோரும் எமது கிராமத்தையும் சுற்றிப் பார்க்க வேண்டும்.

**ஆசிரியர்** - நிச்சயமாக! பாடசாலையையே இப்படி வைத்திருக்கிறீர்கள். உங்கள் கிராமத்து எழிலை வரும் வழியில் கண்டோம். நாளை போட்டி முடிந்ததும் கிராமத்தைச் சுற்றிப் பார்ப்போம்.

**அதிபர்** - நல்லது. நிச்சயம் நல்ல அனுபவத்தைப் பெறுவீர்கள். அதனை உங்கள் ஊரில் உள்ளவர்களோடு பகிர வேண்டும். உங்கள் பாடசாலையையும் ஊரையும் இயற்கை எழில் நிறைந்த பூமியாக மாற்ற வேணடும். மரங்களை நடுவது நல்ல சமூகப்பணி மட்டுமல்ல அது இறைபணியும் ஆகும். எமது முன்னோர் மரங்களைத் தெய்வமாகப் போற்றியவர்கள்; தலவிருட்சங்களாகத் தொழுதவர்கள். நாமும் அவர்களைப் போலவே, பொருத்தமான இடம் எங்கும் மரங்களை நடவேண்டும்; பராமரிக்க வேண்டும்; வளம் பெறவேண்டும்.

**காந்தன்** - நாம் இயற்கையை நேசித்தால் இயற்கையும் நம்மை நேசிக்கும் என்று படித்திருக்கிறேன்.

**அதிபர்** - அருமையாகச் சொன்னீர்கள். நாளை நீங்கள் புறப்படும்போது உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மரக்கன்று அன்பளிப்பாகக் கிடைக்கும்.

**ஆசிரியர்** - நமது சமயம் இயற்கையானது; இயற்கையைப் போற்றுவது. இயற்கை அனைத்திலும் இறைவன் கலந்துள் ளான். இறைவனின் அருள் வெளிப்படும் இடங்களாக நீர்நிலைகள், தாவரங்கள் முதலானவற்றை நாம் கருது கிறோம். இயற்கை தரும் பயன்கள் அனைத்தும் இறைவனின் கருணைக்கு அடையாளங்களே.

**அதிபர்** - இறைவனது கருணை குளிர்ச்சியானது. மரங்கள் தரும் குளிர்ச்சியிலும் நாம் இறைவனது கருணையைத் தரிசிக் கலாம். அப்பர் சுவாமிகள் இறைவனது கருணை நிழலை எவ்வாறாக எல்லாம் காண்கிறார் பாருங்கள்.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.



இயற்கையைப் போற்றுவோம்!
அதில் இறைவனைக் காண்போம்!

## பயிற்சி


**சுருக்கமான விடை எழுதுவோம்.**

1. இறைவன் தந்த இயற்கை வரம் எது?
2. உலகத்தைக் குளிர்ச்சியாக மாற்றுவதற்கு நாம் செய்ய வேண்டியது யாது?
3. மரங்களை மாணவர்கள் எவ்வாறு பராமரிக்கிறார்கள்?
4. பாடசாலையில் எவ்வாறான மரங்களை நட்டிருந்தார்கள்?
5. இங்கு இறைபணியாகச் சொல்லப்பட்டிருப்பது யாது?
6. இறைவனின் கருணைக்கு அடையாளமாக விளங்குபவை எவை?
7. இறைவனின் கருணை நீழலை சிறப்பித்து அப்பர் சுவாமிகள் பாடிய தேவாரம் எது?

## செயற்பாடு

மரக்கன்று ஒன்று நடுவோம்; கவனமாகப் பராமரிப்போம்.

# 16 அபிராமியின் அருள்



சோழ நாட்டில் திருக்கடவூர் என்னும் ஓர் ஊர் உண்டு. அங்கு அமிர்தகடேஸ்வரரும் அபிராமி அம்மையும் கோயில்கொண்டு எழுந்தருளியுள்ளனர். அவ்வூரிலே, அபிராமி அம்மையின்மீது அளவற்ற பக்தி பூண்ட பட்டர் ஒருவர் வாழ்ந்துவந்தார். அவரை அபிராமிப்பட்டர் என்று அழைப்பர்.

அபிராமிப்பட்டர், அன்னையை நினைந்து தியானத்தில் ஆழ்ந்து விடுவார். அவ்வேளையில் அன்னையின் திருவுருவைத் தவிர வேறு எதனையும் அவர் காணமாட்டார். ஊரில் நடப்பது எதையும் அறியமாட்டார். பட்டரது பக்தி நிலையை அறியாத ஊர்மக்கள், அவருக்கு பித்துப் பிடித்துவிட்டதாகக் கூறிக்கொண்டனர்.

ஒரு அமாவாசை தினம். அபிராமி அம்பாள் சந்நிதியில் பட்டர் தியானத்தில் அமர்ந்திருந்தார். அப்பொழுது அந்நாட்டு மன்னன், அங்கே வழிபடுவதற்கு வந்தான். தியான நிலையில் இருந்த பட்டரைக் கண்டான். ''இவர் யார்?'' என அருகில் நின்றோரிடம் வினவினான். ''அவர் ஒரு பித்தர்'' என மக்கள் கூறினர். மன்னன் எதுவும் கூறாது கோயிலினுட் சென்று அபிராமியைத் தரிசித்தான்.

தரிசனம் முடிந்தபின் மீண்டும் மன்னன் பட்டரின் அருகில் வந்தான். அவரிடம் பேச ஆவல் கொண்டான். அவர் அருகிற் சென்று ''பட்டரே இன்று என்ன திதி?'' என்று கேட்டான். அதற்குப் பட்டர் ''இன்று பௌர்ணமி'' என பதில் கூறினார். அதைக் கேட்ட மன்னன், ''இன்று அமாவாசை. பட்டர் பௌர்ணமி என்று கூறுகிறார். மக்கள் இவரைப் பித்தர் என்று கூறியது உண்மைதான்'' என எண்ணிக் கொண்டு அவ்விடத்தை விட்டு அகன்றான்.

தியான நிலையிலிருந்த பட்டர் கண்விழித்தார். அங்குள்ளோர் நடந்த விடயத்தை அவரிடம் கூறினர். பட்டர், தான் அமாவாசை தினத்தைப் பௌர்ணமிதினம் என்று மன்னனிடம் தவறாகச் சொன்னதை நினைத்துக் கவலை அடைந்தார். தான் மன்னனிடம் பொய் கூறிவிட்டதாக எண்ணிப் பதைபதைத்தார். தம்மை இப்பழியிலிருந்து காப்பாற்ற அன்னை அபிராமியாலேயே முடியும் என எண்ணினார்.

மனதில் வைராக்கியத்துடன் கோயில் முற்றத்தில் ஒரு ஆழமான குழியைத் தோண்டினார். அக்குழிக்கு மேலே உயரத்தில் ஓர் உறியைக் கட்டினார். குழியுள் விறகிட்டுத் தீ மூட்டினார். பின் உறியின்மேல்

ஏறி அமர்ந்து அபிராமியை மனதில் நினைத்துப் பாடல்களைப் பாடத் தொடங்கினார். எவ்வாறாயினும் அன்றிரவு வானில் பூரணசந்திரன் தோன்ற வேண்டும். அதன்மூலம் இன்று பௌர்ணமி என்பதை நிரூபிக்க வேண்டும் என்பதே பட்டரின் பிரார்த்தனையாகும். அம்பாளைப் பிரார்த் தித்து பாடல்களை அந்தாதியாகப் பாடத் தொடங்கினார்.





அன்னை அபிராமி தனது பக்தன் பட்ட துன்பத்தைப் போக்கத் திருவுளம் கொண்டாள். பட்டர் எழுபத்தொன்பதாவது பாடலாக 'விழிக்கே அருளுண்டு' என்னும் பாடலைப் பாடினார். அப்போது அன்னை அபிராமி, தனது காதிலே விளங்கிய ஒளி பொருந்திய தோட்டைக் கழற்றி வான்வெளியில் எறிந்தாள். அது பூரணசந்திரனாகக் காட்சியளித்தது. அங்கிருந்தோர் அக்காட்சியைக் கண்டு அதிசயித்தனர்.

இந்த அழகிய காட்சியை மன்னனும் கண்டான். பட்டரிடம் ஓடி வந்தான். தன்னை மன்னிக்கும்படி வேண்டினான். பட்டர் நூற்றொரு பாடல்களைப் பாடி முடித்தார். அவர் பாடிய பாடல்களே அபிராமி அந்தாதியாகும்.

அன்னையைப் பணிவோம்;

அவள் அருள் பெறுவோம்.

## பயிற்சி

I. **சுருக்கமான விடை எழுதுவோம்.**


1. திருக்கடவூர் இறைவன், இறைவி யாவர்?
2. பட்டருக்குப் பித்து என்று ஊர் மக்கள் கூறக் காரணம் என்ன?
3. மன்னர் பட்டரிடம் வினாவியது யாது?
4. பட்டர் அதற்குக் கூறிய பதில் யாது?
5. பட்டர் மனம் வருந்தியமைக்கான காரணம் யாது?
6. பட்டர் எப்பாடலைப் பாடும்போது, பூரண சந்திரன் வானில் தோன்றியது?
7. அபிராமிப் பட்டர் அன்னை அபிராமியைத் துதித்துப் பாடிய நூல் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

II. **பின்வரும் சொற்களுக்கான விளக்கங்களைத் தேடியறிவோம்.**

1. அந்தாதி -
2. அமாவாசை -
3. பௌர்ணமி -

## செயற்பாடு

*அபிராமி அந்தாதிப் பாடல்கள் சிலவற்றைக் காட்சிப்படுத்தி, வாசிப்போம்.*



# 17 இயற்கை வழிபாடு



இயற்கையில் இறைவனைக் கண்டு வழிபடும் சமயம் எமது சமயம். எமது முன்னோர் சூரியன், சந்திரன், அக்கினி, வருணன் இந்திரன் ஆகியோரை வழிபாடு செய்தனர். இயற்கையோடு இணைந்து வாழ்ந்தனர். இதனால் இயற்கையின் சமநிலை பேணப்பட்டது. மக்கள் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்ந்தனர்.

தூய்மை உள்ள இடத்திலேயே தெய்வம் குடியிருக்கும் என்பர். எனவே நாம் வாழும் வீட்டையும் சுற்றுச் சூழலையும் சுத்தமாக வைத்திருப்பது இறைவழிபாட்டுக்கு அவசியமாகும். இறைவனை மலர்களால் அர்ச்சித்தும் அலங்கரித்தும் வணங்குவது எமது மரபாகும்.

நெல், எள் முதலான தானியங்களையும் பழங்களையும் வழிபாட்டுக்குப் பயன்படுத்துகிறோம். பசு முதலான விலங்குகளிலிருந்து பெறும் பயன்களும் வழிபாட்டுக்கு உதவுகின்றன. எனவே வீட்டைச் சுற்றி பூமரங்களையும் காய்கனி தரும் மரங்களையும் அக்கறையோடு வளர்ப்பது நமது இயல்பாகும்.

பயிர்ச்செய்கையையும் கால்நடை வளர்ப்பையும் தெய்வீகமான தொழில்களாகவே நாங்கள் போற்றுகிறோம். அவற்றால் உலகின் உணவுத் தேவை நிறைவு செய்யப்படுகிறது; சூழலின் அழகும் சமநிலையும் பேணப்படுகின்றன.

ஆலயங்களில் தல விருட்சங்களாக மரங்களைப் போற்றி வழிபடுகின்றோம். ஆல், அரசு, வேம்பு முதலான மரங்களின் அடியில் தெய்வ உருவங்களை வைத்து எளிமையான முறையில் வழிபடுகின்றோம்.

தல விருட்சங்களைப் பேணுவது போன்றே தீர்த்தக் கிணறு, கேணி, குளம், ஆறு முதலான நீர் நிலைகளையும் தெய்வத் தன்மை உடையவனவாகப் போற்றுகிறோம். ஆலயங்களில் தீர்த்தோற்சவம் இத்தகைய புனித நீர் நிலைகளிலேயே இடம் பெறுகின்றது.

சுருக்கமாகக் கூறின், சைவ மக்களாகிய நாம் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்களையும் வணங்குகிறோம்.

இன்றைய உலகில் பலரும் இயற்கையைப் பேணத் தவறி விடுகின்றனர்; மரங்களை அழிக்கின்றனர்; நீர்நிலைகளை

மாசுபடுத்துகின்றனர். தொழிற்சாலைப் புகை முதலான கழிவுகளால் சூழல் அசுத்தமடைகிறது; பூமியின் வெப்பம் அதிகரிக்கின்றது; மழைவீழ்ச்சி குறைவடைகிறது; பஞ்சம் ஏற்படுகின்றது; மக்கள் நோய்வாய்ப்படுகின்றனர். இவற்றைத் தடுக்க வேண்டுமானால் இயற்கையைப் பேணிப் பாதுகாத்தல் அவசியமாகும்.

மரங்களை வளர்த்தல் வேண்டும். நீர்நிலைகளைப் பாதுகாக்க வேண்டும். இயற்கை வளங்களை வீண்விரயம் செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

உலக நாடுகள் பலவும் இயற்கையைப் பேணுவதற்குப் பல முயற்சிகள் எடுத்துவருகின்றன. நாமும் இயற்கை அன்னையைப் பேணுவோம். அதுவே எங்கள் சமய நெறி.

**சூழலைப் பேணுவோம்;**
**சுகமாக வாழ்வோம்!**

## பயிற்சி

**அட்டவணையைப் பூர்த்தி செய்வோம்.**

| | |
|---|---|
| 1. இயற்கைத் தெய்வங்கள் | |
| 2. வழிபாட்டுக்குப் பயன்படுத்தும் இயற்கைப் பொருட்கள் | |
| 3. தெய்விகமான தொழில்கள் | |
| 4. தல விருட்சங்கள் | |
| 5. புனித நீர்நிலைகள் | |
| 6. பஞ்சபூதங்கள் | |
| 7. இயற்கையைப் பேணும் முறைமை | |

## செயற்பாடு

நீங்கள் செய்யும் இயற்கை வழிபாடுபற்றிக் கலந்துரையாடுங்கள்.

# 18 சைவ நற்பண்புகள்



பண்புகள் என்றால் இயல்புகள் அல்லது குணங்கள் எனலாம். ஒவ்வொரு பொருளுக்கும் அது அதற்கென்று உரிய பண்புகள் சில உண்டு. அப்பண்புகளே ஒவ்வொன்றையும் மற்றவற்றிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன.

சில பண்புகள் நல்லன என்றும் சில பண்புகள் தீயன என்றும் கொள்ளப்படுகின்றன. நற்பண்புகளே உலகத்தாரால் விரும்பப்படுவன; தீய பண்புகள் வெறுக்கப்படுவன.

நமது சமயம் மக்களைத் தீய பண்புகளினின்றும் விலக்கி, நல்லவற்றிடம் வழிப்படுத்தும் இயல்பினை உடையது.

சைவம் வலியுறுத்தும் நற்பண்புகளுள் பிரதானமானது இறை நம்பிக்கையாகும். ஒழுக்கமாக வாழ்வதற்கு இறைநம்பிக்கை அவசிய மானது. நாம் மனதாலும் வாக்காலும் காயத்தாலும் செய்யும் வினைகளின் பலனை இறைவன் நம்மிடம் சேர்ப்பிக்கிறான்.

நன்மை செய்தவர்கள் நன்மையையும் தீமை செய்தவர்கள் தீமையையும் அனுபவித்தே தீர்வார்கள் என்ற உண்மையை உணர்ந்து கொண்டால் நாம் ஒருபோதும் தீமைகளைச் செய்யமாட்டோம்; எப்போதும் நன்மைகளையே செய்வோம்.

இறைவனிடம் நாம் வைக்கும் நம்பிக்கையே முதிர்ந்து இறைபக்தி யாகின்றது. இறைபக்தி என்பது இறைவனிடம் கொள்ளும் அன்பாகும்.



இறைவன் சகல உயிர்களிடத்தும் உறைந்துள்ளான். அவன் சகல உயிர்களிடத்தும் கருணை உள்ளவன். நாம் இறைவனிடத்து அன்புள்ளவர்களாயின், அவனது கருணைக்கு உரிய சகல உயிர்களிடத்தும் அன்புடையவர்களாக, கருணை உடையவர்களாக நாமும் வாழவேண்டு மல்லவா?

பிற உயிர்களிடத்து அன்புள்ளவர்களாக நாம் வாழ்வோமே யானால், யாருக்கும், எந்த உயிருக்கும் தீமை செய்யமாட்டோம்; யாரையும் துன்புறுத்தமாட்டோம்; எந்த உயிரையும் கொல்லமாட்டோம்.

பிறரிடம் அன்பு இல்லாவிட்டாலே நாம் அவர்களைப் பார்த்துப் பொறாமை கொள்வோம்; அவர்களிடம் பொய்பேசுவோம்; அவர்களுக்குத் தீங்கு நினைப்போம்; கடுஞ்சொல் பேசுவோம். அவையெல்லாம் தீய பண்புகள். இறைவனைப் போலவே எல்லா உயிர்களிடமும் அன்பு கொண்ட நாம், அத்தீய பண்புகளை உடையவர்களாக வாழமாட்டோம். மாறாக எப்போதும் உண்மையே பேசுவோம்; எல்லோருக்கும் நன்மையே உண்டாக வேண்டும் என்று நினைப்போம். இனிய வார்த்தைகளையே பேசுவோம். பிறர் நோயாலோ வறுமையாலோ ஏதேனும் இழப்பினாலோ துன்பப்படுவதைக் கண்டால் அவர்களுக்காக இரங்குவோம், அவர்களுக்கு நம்மாலான உதவிகளைச் செய்வோம்.

நாம் மற்றவர்களுக்கு உதவினால் அவர்களும் எமக்கு உதவுவார் கள். ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழ்வதே சைவ வாழ்வாகும். நற்பண்புகளுடன் வாழும் வாழ்க்கை என்றும் இன்பமயமானதாகவே அமையும்.



''எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல்
வேறொன்றும் அறியேன் பராபரமே''

நல்லதை நினைப்போம்;
நல்லதைச் செய்வோம்.

## பயிற்சி

I. **பின்வரும் வரிப்படத்தைப் பூரணப்படுத்துவோம்.**

குணங்கள்

| நல்ல குணங்கள் | தீயகுணங்கள் |
|---|---|
| 1. ____________ | 1. ____________ |
| 2. ____________ | 2. ____________ |
| 3. ____________ | 3. ____________ |

II. **கீறிட்ட இடங்களை நிரப்புவோம்.**

1. பண்புகள் என்றால் ____________
2. சைவம் வலியுறுத்தும் நற்பண்புகளுள் பிரதானமானது ____________
3. இறைவனிடம் கொள்ளும் அன்பே ____________ ஆகும்.
4. பிறரிடம் அன்பு இல்லாவிட்டால் நாம் ____________
5. நாம் மற்றவர்களுக்கு உதவினால் அவர்களும் எமக்கு ____________

## செயற்பாடு

நற்பண்புகளைப் பின்பற்றுவதால் தனி மனிதனுக்கும் சமூகத் திற்கும் ஏற்படும் நன்மைகள்பற்றிக் கலந்துரையாடுவோம்.

# 19 நவராத்திரி

வெள்ளைக் கலை உடுத்து வெள்ளைப் பணி பூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியாசனத்தில் அரசரோடு என்னைச்
சரியாசனம் வைத்த தாய்.



வாணிபுரம் வித்தியாலய ஆரம்பப் பிரிவு மாணவர்கள், இப் பாடலை இசையோடு பாடிக்கொண்டிருந்தனர். சங்கீத ஆசிரியர் வேணி, பாடும் முறையைக் கற்பித்துக் கொண்டிருந்தார். ஆசிரியர் நடுவில் நின்று கொண்டிருந்தார். மாணவர்கள் வட்டமாக அமர்ந்திருந்தனர்.

ஆசிரியர் - பிள்ளைகளே நாளை சரஸ்வதி பூசை ஆரம்பமாகிறது. காலையில் பூசை முடிந்ததும் இப்பாடலை நீங்கள் பாட வேண்டும். தொடர்ந்து வரும் எல்லா நாள்களிலும் இதனைப் பாடுங்கள்.

மாலினி - ரீச்சர், சரஸ்வதி பூசை ஆரம்பமாகி ஆறு நாட்கள் முடிந்து விட்டன. நாளை ஏழாவது நாள். நாங்கள் ஏன் இதனை நாளையிலிருந்து பாடத் தொடங்க வேண்டும்?

அமுதன் - மாலினி, நாங்கள் சரஸ்வதி பூசை ஆரம்பத்தில் முதல் மூன்று நாட்களும் துர்க்கை அம்மனை வழிபட்டோம். துர்க்கைக்குரிய பாடல்களைத்தானே அக்கமார் பாடினார்கள். அடுத்த மூன்று நாள்களும் இலக்குமி தேவியை வழிபட்டோம். இலக்குமிக்குரிய பாடல்கள் பாடப்பட்டன. நாளைதானே சரஸ்வதி பூசை ஆரம்பமாகின்றது. அப்படிதானே ரீச்சர்?

ஆசிரியர் - ஆமாம் பிள்ளைகளே, சரஸ்வதி பூசை என்று நாங்கள் பொதுவாகச் சொல்கிறோம். உண்மையில் இதனை நவராத்திரி என்று கூறுவதே பொருத்தமானது. நவ என்றால் ஒன்பது; ராத்திரி என்றால் இரவு. ஆகவே நவராத்திரி என்றால்...

பிள்ளைகள் அனைவரும் - ஒன்பது இரவுகள்.

ஆசிரியர் - மெத்தச் சரி.

அகிலன் - ரீச்சர், நாங்கள் எங்கள் வீட்டிலும் நவராத்திரி கொண்டாடுகின்றோம். நவதானியங்கள் முளைக்கப் போட்டுள்ளோம். கொலுவும் வைத்திருக்கிறோம்.



அமுதா - நவராத்திரியில் கொலு வைப்பது ஏன் ரீச்சர்?

ஆசிரியர் - கொலுவில் மனிதர்கள், தெய்வங்கள், விலங்குகள் என்று அனைத்து பொம்மைகளையும் வரிசையாக அழகாக அடுக்கி வைத்திருப்பார்கள். உலகில் உள்ள உயிரினங்கள் அனைத்தையும் காத்து அருள் செய்பவர் சக்தி. அதனை உணர்த்தவே நவராத்திரி காலத்தில்

கொலு வைத்து வழிபாடு செய்யப்படுகின்றது. அனைத்து உயிர்களுக்கும் இவ்வுலகம் சொந்தமானது. அனைத்தையும் மதித்துப் போற்றிப் பாதுகாக்க வேண்டும். இயற்கையின் சமநிலையைக் குழப்பினால் உயிரினங்கள் அனைத்தும் பாதிப்படையும். எனவே உயிரினங்கள் அனைத்தையும் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்பதையே கொலு வைத்தல் வலியுறுத்துகின்றது.

காந்தன் - ஆமாம் ரீச்சர் அழிந்துவரும் உயிரினங்களைப் பாதுகாப்பதற்காக பல அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று எனது அண்ணா எனக்குச் சொன்னார்.

அமுதன் - ரீச்சர், நாங்கள் ஏன் துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி என்று தனித்தனியாக வழிபடவேண்டும்?

ஆசிரியர் - அமுதன், நல்ல கேள்வி. சக்தியிடமிருந்தே நாம் வீரம், செல்வம், கல்வி என்று அனைத்தையும் பெறமுடியும். எனினும் வீரம் தரும் தேவியாக துர்க்கையையும் செல்வத்தை அருள்பவராக இலக்குமியையும் கல்வியை அருள்பவராக சரஸ்வதியையும் சிறப்பாக வழிபாடு செய்கின்றோம். ஏனெனில் ஒருவரது வாழ்க்கையில் இம்மூன்றும் சேர்ந்து இருக்கும்போதே அமைதியும் மகிழ்ச்சியும் ஏற்படும். ஏதாவது ஒன்று குறைந்தாலும் அங்கு மன அமைதியோ மகிழ்ச்சியோ

இருக்கமாட்டாது. தனது அடியவர்களுக்கு அருள் புரிவதற்கு சக்தியே துர்க்கையாகவும் இலக்குமியாகவும் சரஸ்வதியாகவும் காட்சியளிக்கிறார்.

சாந்தன் - ஒன்பதாம் நாள் இரவு ஆயுத பூசை என்று அப்பா சொன்னார். தொழில் செய்வோர். தத்தமது தொழிற் கருவிகளை தேவியின்முன் வைத்து பூசை வழிபாடு செய்வார்களாம். அது ஏன்?

ஆசிரியர் - ஆமாம் சாந்தன். செய்யும் தொழில் தெய்வத்துக்குச் சமமானது. தொழிலில் உயர்வு, தாழ்வு காட்டக்கூடாது. எவர் எத்தொழில் செய்தாலும் நேர்மையுடனும் உண்மையுடனும் செய்தல்வேண்டும். அதற்கான ஆற்ற லையும் மனப்பக்குவத்தையும் தரவேண்டும் என்றே சக்தியிடம் பிரார்த்திப்பர். இதனையே ஆயுத பூசை வெளிப்படுத்துகின்றது.

அகிலன் - பத்தாம் நாள் விஜயதசமி கொண்டாடப்படும். இல்லையா? எங்கள் கோவிலில் வாழை வெட்டு நடைபெறும். அதை ஏன் செய்கிறார்கள்?

ஆசிரியர் - மகிஷாசுரன் என்ற அசுரன் மக்களுக்குக் கொடுமைகள் பல செய்தான். துர்க்காதேவி அவனை சம்ஹாரம் செய்து மக்களைத் துன்பத்திலிருந்து காப்பாற்றி அருள் புரிந்தாள் என்பது புராணக் கதை. இதன் ஞாபகார்த்தம்தான் வாழை வெட்டுதல் ஆகும்.

சாந்தன் - சென்ற விஜயதசமி அன்றுதான் நான் சங்கீதம் கற்கத் தொடங்கினேன்.

அமுதா - நான் நடனம் கற்க முதலில் சென்றதும் அன்றைய தினம்தான். அன்றுதான் எனது தம்பிக்கு ஏடும் தொடக்கினார்கள்.

ஆசிரியர் - நீங்கள் சொல்வது சரி. விஜயதசமி அன்று கலைகள் பயிலவும், ஏதாவது காரியத்தை செய்யவும் தொடங்குதல் சிறப்பானது. எங்கள் பாடசாலையிலும் இந்தமுறை புதிய இசை நடன வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.



அகிலன் - ரீச்சர், சரஸ்வதிக்குரிய நாட்களில் சிறப்பாக நாம் படிக்க வேண்டியவை யாவை?

ஆசிரியர் - சகலகலாவல்லிமாலை என்ற தோத்திரப் பாடலைப் படித்தல் நல்லது. இது குமரகுருபர சுவாமிகளால் அருளப்பட்டது. சிறப்பாக, சரஸ்வதி பூசையின்போது இது பாடப்படும்.

பிள்ளைகளே! நாளைக்கு அப்பாடல்களில் ஒன்றைப் பாடப் பழகிக் கொள்வோம். இப்போது அமைதியாக வகுப்பறைக்குச் செல்லுங்கள்.

பிள்ளைகள் - வணக்கம் ரீச்சர்!

**கலைமகளைக் கைதொழுவோம்;**
**கல்வியினைப் பெற்றிடுவோம்!**

## பயிற்சி

**சுருக்கமான விடை எழுதுவோம்.**

1. நவராத்திரி என்பதன் பொருள் யாது?
2. கொலு வைப்பதன் நோக்கம் யாது?
3. ஆயுதபூசை செய்வதன் நோக்கம் யாது?
4. வாழைவெட்டு ஏன் நடைபெறுகிறது?
5. விஜயதசமியன்று நடைபெறுவன எவை?
6. சகலகலாவல்லி மாலை யாரைப் புகழ்ந்துபாடுகிறது? இதனை அருளியவர் யார்?

## செயற்பாடு

பாடசாலை நவராத்திரி பூசையில் ஆர்வத்துடன் பங்கெடுப்போம்.

# 20 சித்தராக வந்த சிவபெருமான்



பாண்டிய நாட்டை அபிடேக பாண்டியன் என்னும் மன்னன் ஆண்டு வந்தான். அவன் சிறந்த சிவபக்தனாக விளங்கினான். அவனுக்கு அருள்புரிய சிவபெருமான் திருவுளம் கொண்டார்.

சிவபெருமான் சித்தராக வேடம் தாங்கினார். நீண்ட சடை, நெற்றியில் திருநீறு, இடையில் புலித்தோலாடை என்பவற்றோடு விளங்கினார். அவர் பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரையிலே பல இடங்களிற் காட்சியளித்தார்.

அச்சித்தர் முதியோரை இளைஞராக்கினார்; இரும்பைப் பொன்னாக்கினார்; பட்ட மரங்களைத் தளிர்க்கச் செய்தார். இவ்வாறு பல சித்து விளையாட்டுக்களைச் செய்தார். அவற்றைக் கண்டு மக்கள் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர்.

சித்தரின் சித்து விளையாட்டுக்களை மன்னன் கேள்வியுற்றான். அவரைக் காண விரும்பினான். ஆயினும், அகந்தை காரணமாக, சித்தர் இருக்குமிடத்திற்கு நேரிற் சென்று காண அவன் விரும்பவில்லை. சித்தரை அரண்மனைக்கு அழைத்துவரும்படி கட்டளையிட்டான். மன்னனின் அழைப்பைச் சித்தர் ஏற்கவில்லை. ''உங்கள் மன்னரால் யாதொரு பயனும் இல்லை. நான் வரப்போவதில்லை'' என்று கூறினார்.

அதனைக் கேட்ட மன்னன் ''காடுமேடு எங்கும் அலைந்து திரியும் சித்தருக்கு இவ்வளவு அகந்தையா? எனது அழைப்பை அலட்சியப்படுத்தி விட்டாரே'' என்று சீற்றம் அடைந்தான். எனினும், அவரைக் காண விரும்பினான்.

அபிடேக பாண்டியன், சித்தர் தங்கியிருந்த கோயிலுக்கு வந்தான். மன்னனின் வருகையைக் கண்டு அனைவரும் மரியாதை செய்தனர். சித்தர் கண்டும் காணாதவர்போல் அலட்சியமாக அமர்ந்திருந்தார்.

சித்தரின் அருகில் மன்னன் சென்றான். ''யோகியாரே தாங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்'' என்று பணிவுடன் கேட்டான். அதற்குச் சித்தர் ''எனது உறைவிடம் காசி. எனது உறவினர்கள் சிவனடியார்கள். சித்து விளையாட்டு எனது தொழில். உம்மிடம் யான் பெறவேண்டியது யாதுமில்லை'' என ஏளனமாகக் கூறினார்.

சித்தரின் பேச்சு மன்னனுக்குக் கோபத்தை உண்டாக்கியது. அவரின் சித்து விளையாட்டைப் பரீட்சிக்க விரும்பினான். சற்றுத் தூரத்தில் இருந்த கரும்புக் கட்டுக்களையும் சித்தரின் அருகில் இருந்த கல்யானையையும் அவதானித்தான். கரும்புக் கட்டிலிந்து ஒரு கரும்பை எடுத்துச் சித்தரிடம் கொடுத்தான்.

''சித்தரே! தங்களுக்கு அருகில் உள்ள கல்யானைக்கு இந்தக் கரும்பைக் கொடுத்து உண்ணச் செய்யுங்கள் பார்க்கலாம்'' என்று ஏளனத்துடன் கூறினான். சித்தரும் புன்னகைத்தவாறே அருகில் நின்ற கல்யானையைப் பார்த்தார். என்ன ஆச்சரியம்! கல்யானை கண்திறந்து பார்த்தது. யாவரும் கேட்கும்படி பிளிறியது. சித்தர் கரும்பை நீட்டினார். யானை துதிக்கையை நீட்டிக் கரும்பை வாங்கித் தின்றது. மீண்டும் கல்யானையாக மாறியது.

மன்னனும் அங்கிருந்த மக்களும் இவ்வதிசயக் காட்சியைக் கண்டனர். மன்னனின் அகந்தை நீங்கியது. அவன் சித்தரின் பாதம் பணிந்தான். தன்னை மன்னிக்கும்படி வேண்டினான். மன்னித்தருளிய சித்தர் திடீரென மறைந்தார். சித்தராக வந்தவர் சிவபெருமானே என மன்னன் உணர்ந்து கொண்டான்; இறைவனது திருவிளையாடலை நினைத்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான்; இறைவனைப் போற்றி வணங்கினான்.

**அகந்தையைப் போக்கினால்**

**ஆண்டவனைக் காணலாம்!**

## பயிற்சி

**பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புவோம்.**

1. பாண்டிய நாட்டை ஆண்ட ______________ சிறந்த ______________

2. நீண்டசடை, நெற்றியில் ______________, இடையில் ______________ உடையவராக சித்தர் காட்சியளித்தார்.

3. ______________ இளைஞராக்கியும் ______________ பொன்னாக்கியும் பட்ட ______________ தளிர்க்கச் செய்தும் ______________ விளையாட்டுக்கள் செய்தார்.

4. ______________ சித்தரின் உறைவிடம்; ______________ அவரது உறவினர்கள்; ______________ அவரது தொழில்.

5. மன்னன் ______________ கட்டுகளையும் கல் ______________ அவதானித்தான்.

6. கல்யானை ______________ பார்த்து, யாவரும் கேட்குமாறு ______________ துதிக்கையை நீட்டிக் ______________ வாங்கித்தின்ற பின் ______________ மாறியது.

7. சித்தராக வந்தவர் ______________.

## செயற்பாடு

சிவபெருமானின் திருவிளையாடல்களைத் தேடி அறிவோம்.



# 21 குருகுலக்கல்வி



முற்காலத்தில் இன்றுபோலப் பள்ளிக்கூடங்கள் இருக்கவில்லை. அவற்றுக்குப் பதிலாகக் குருகுலங்களே இருந்தன. ஒழுக்கத்திலும் அறிவிலும் தவத்திலும் சிறந்த முனிவர்கள் ஆசிரமங்களில் வாழ்ந்து வந்தனர். ஆசிரமங்கள் நகரங்களுக்கு வெகு தூரத்தில் காணப்பட்டன. இவை ஆற்றோரங்கள், மலையடிவாரங்கள், காடுகள் முதலான ஆரவார மில்லாத அமைதியான இடங்களில் அமைந்திருந்தன. அவ்விடங்களில் முனிவர்கள் இறை வழிபாட்டிலும் கல்வி கேள்விகளிலும் ஈடுபட்டிருப்பர்.

இந்த முனிவர்களைக் குருவாகக் கொண்டு அவர்களிடம் கல்வி கற்பதற்குப் பலர் வந்து சேர்வார்கள். கல்வி பயிலும் காலம் முழுவதும் அவர்களுடனேயே தங்கியிருப்பார்கள். கல்வி பயிலும் நேரம் தவிர எஞ்சிய நேரங்களில் குருவுக்கும் குருபத்தினிக்கும் உதவிபுரிவர். இந்த

மாணவர்களில் அரச குமாரர்களும் இருப்பர்; சாதாரண பிள்ளைகளும் இருப்பர். குரு வேற்றுமை பாராட்டாது எல்லோரையும் சமமாக நடத்துவார்.

அவர்கள் கற்கும் கல்வியானது பிரதானமாக இறைவனைப் பற்றியும் இறைவனை அடையும் வழிகளைப் பற்றியதுமாக இருக்கும். வேதமந்திரங்களைப் பிழையின்றி ஓதுவதற்கும் கற்றுக் கொள்வர். இக்காலத்தைப் போலப் புத்தகங்கள், எழுதும் உபகரணங்கள் எதுவும் அக்காலத்தில் இருக்கவில்லை. குருவானவர் கூறுவதைக் காதால் கேட்டு மனதிலே பதித்துக் கொள்வார்கள்.

கல்வி கற்கும் காலம் முடிவடைந்ததும் குருவானவர் சீடரை வாழ்த்தி அவர்களின் இடங்களுக்கு அனுப்பி வைப்பார். குருகுல வாசகாலத்தில் மாணவர்கள் பிரமச்சாரிகளாகவே இருப்பர். இக்கல்வி முறையில் நல்லொழுக்கம் முக்கிய இடம் பெற்றது. சீடர்கள் குருவைப் பணிந்து பயபக்தியுடன் கல்வியைக் கற்பர். குருவுக்கு வேதனம் வழங்கும் முறை இருக்கவில்லை. கல்வி கற்று முடிந்து வீடு செல்லும்போதே குருவுக்கு தட்சணை வழங்குவர். குரு விரும்புவதை சீடன் நிறைவேற்றுவதே குருவுக்கு வழங்கும் உயர்ந்த சன்மானமாகக் கருதப்பட்டது.

குருவுக்கும் சீடர்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு காணப்பட்டது. சீடர்கள் குருவிடம் பெருமதிப்புக் கொண்டிருந்தனர். அங்கு பெறும் கல்வியும் அனுபவமுமே பின்னர் அவர்கள் இல்லற வாழ்க்கையைச் சிறப்புடன் நடாத்த வழிகாட்டுவனவாக அமைந்தன.

அக்காலத்தில் மக்களின் வாழ்க்கை அன்பு, அமைதி, நேர்மை, உண்மை என்பன நிறைந்ததாக இருந்தது. இதற்கு குருகுலவாசமே பெரிதும் துணை புரிந்தது எனலாம். கல்வியை உலகியல் தேவைகளுக்கு மட்டும் பயன்படுத்தாது ஆன்மிக முன்னேற்றத்துக்கும் பயன்படுத்துவதே சிறந்ததாகும்.

**கல்வியின் பயன்**
**ஒழுக்கமும் பணிவும்.**

## பயிற்சி

I. **கீழே தரப்பட்டுள்ளவற்றை குருகுலக்கல்வி, இன்றைய கல்வி என்ற தலைப்புக்களின் கீழ் வேறுபடுத்தி எழுதுவோம்.**

| | | குருகுலக்கல்வி | இன்றைய கல்வி |
|---|---|---|---|
| 1 | கல்விக் கூடங்கள் காணப்பட்ட இடம் | ______________ | ______________ |
| 2 | குருவுக்குரிய உயர் சன்மானம் | ______________ | ______________ |
| 3 | இல்லற வாழ்வை சிறப்பாக்குபவை | ______________ | ______________ |
| 4 | கல்வியின் நோக்கம் | ______________ | ______________ |
| 5 | கற்கும் விடயங்கள் | ______________ | ______________ |

II. **பின்வரும் சொற்களுக்கான கருதுத்துக்களைத் தேடியறிவோம்.**

1. பிரமச்சாரி -
2. வேதனம் -
3. இல்லறம் -
4. தட்சணை -

## செயற்பாடு

புராண இதிகாசங்களில் வரும் குருகுலங்கள் பற்றிக் கலந்துரையாடுவோம்.

# 22 நமிநந்தி அடிகள்

சோழ நாட்டிலுள்ள ஏமப்பேரூர் என்னும் ஊரில் நமிநந்தி என்னும் அந்தணர் ஒருவர் வாழ்ந்துவந்தார். அவர் சிவபெருமானுடைய திருவடியை வணங்குதலே தமக்குப் பேரின்பம் எனக் கருதினார். திருவாரூருக்குப் போய் அங்கு எழுந்தருளியுள்ள வன்மீகநாதரை வணங்கிவருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.



வன்மீகநாதருடைய கோயிலின் பக்கத்தே அரநெறி என்னுங் கோயில் இருக்கிறது. ஒரு நாள் நமிநந்தியடிகள் அரநெறிநாதரை

வணங்கி எழுந்த பொழுது, அங்கே இறைவனுக்கு ஏராளமான விளக்கு களை ஏற்றுதற்கு விருப்பங் கொண்டார். அப்பொழுது மாலைக் காலமாதலைக் கண்டு, நேரந் தாழ்த்தாது, அருகேயிருந்த வீடொன்றிற் குச் சென்று, விளக்கேற்றுவதற்கு நெய் தரும்படி கேட்டார். அது சமணர் வீடென்று அவருக்குக் தெரியாது.



வீட்டிலுள்ளோர் ''எரிகின்ற நெருப்பைக் கையில் ஏந்திய உங்கள் பரமசிவனுக்கு விளக்கு எதற்கு? இங்கே நெய்யில்லை; வேண்டுமாயின் நீரை விட்டு விளக்கு எரியும்'' என்றார்கள். இதைக் கேட்ட நமிநந்திக்கு மனம் பொறுக்கவில்லை. கவலையோடு சுவாமி சந்நிதானத்தில் வீழ்ந்து வணங்கினார். அப்பொழுது ''நமிநந்தியே கவலை வேண்டாம்; பக்கத்தே உள்ள குளத்தின் நீரைக் கொண்டுவந்து விளக்கேற்று'' என்று ஒரு அசரீரி ஒலித்தது.



அதைக் கேட்ட அடிகளார் மனம் மிக மகிழ்ந்தார்; இறைவனின் திருவருளை வியந்தார்; இறைவனுடைய திருநாமத்தை உச்சரித்துக் கொண்டு, குளத்து நீரை முகந்துவந்து விளக்கேற்றினார். விளக்கு, சுடர் விட்டு எரிந்தது. அது கண்ட அடிகளார் ஆனந்தக்கூத்து ஆடினார்; கோயில் முழுவதும் விடியும் வரை நீரினால் விளக்கேற்றினார். இவ்வாறு தினமும் செய்துவந்த நமிநந்தி அடிகள், ஒரு வைகாசி மாதத்துப் பூச நாளிலே இறையடி சேர்ந்தார்.

**அன்பினால் மட்டுமே**

**ஆண்டவனை அடையலாம்.**

## பயிற்சி

**சுருக்கமான வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**

1. நமிநந்தி அடிகள் வாழ்ந்த ஊர் எது?

2. அவர் யாரை வணங்குவதை வழக்கமாகக் கொண்டவர்?

3. நமிநந்தி அடிகளுக்கு ஏற்பட்ட விருப்பு யாது?

4. விளக்கேற்றுவதற்கு நெய் தரும்படி யாரிடம் கேட்டார்?

5. சமணர்கள் நெய் கொடுக்காது அடிகளாருக்கு என்ன கூறினார்கள்?

6. அசரீரியாக ஒலித்தவை எவை?

7. அசரீரியைக் கேட்ட அடிகளார் யாது செய்தார்?

8. அடிகளார் எப்போது இறையடி சேர்ந்தார்?

## செயற்பாடு

இறைவனது அருள் பெற்ற வேறொரு நாயனாரது கதையை குழுவாக முன்வையுங்கள்.

# 23 சைவ வாழ்க்கை

ஆரணியும் அகிலனும் மாமா வீட்டுக்கு வந்திருந்தார்கள். மாமாவின் பிள்ளைகளோடு விளையாடினார்கள். எல்லோருக்கும் ஒரே கொண்டாட்டம். மாலையாகி விட்டது. எல்லோரும் கை, கால், முகம் கழுவி விளக்கேற்றி இறைவனைத் தொழுதார்கள்; கூடியிருந்து பிரார்த்தனை செய்தார்கள். பிள்ளைகள் பாடம் படித்தார்கள். இரவு உணவு அருந்தினார்கள். பின் எல்லோரும் முற்றத்தில் அமர்ந்து உரையாடினார்கள்.

***ஆரணி*** - *மாமா! மாமா! நீங்கள் ஒரு கதை சொல்ல வேண்டும்.*

***பூரணி*** - *அப்பா கூறும் கதைகள் சுவையானவை. அப்பா, கதை சொல்லுங்கள் அப்பா!*

***மாமா*** - *நான் உங்களுக்கு நிறையக் கதைகள் சொல்லி விட்டேன். இன்று நீங்கள்தான் எனக்குக் கதை சொல்ல வேண்டும்.*

***பிள்ளைகள்*** - *நாங்களா?*

***மாமா*** - *உங்களிடமும் நிறையக் கதைகள் இருக்கும். ஆனால் நீங்கள் சொல்லும் கதை உங்களின் சொந்த அனுபவமாக இருக்க வேண்டும். அது*

நீங்கள் செய்த நல்ல காரியத்தை விபரிப்பதாகவும் இருக்க வேண்டும்.

**அகிலன்** - சரி, யார் முதலில் சொல்வது?

**அமலன்** - நான் சொல்கிறேன்.

ஒரு நாள் நானும் நண்பர்களும் பாடசாலை விட்டு வந்து கொண்டிருந்தோம். மதியவேளை, நல்ல வெயில், பசி மயக்கம் வேறு. வீதியோரத்தில் எமது வயதை ஒத்த ஒருவன் விழுந்து கிடந்தான். அவன் அருகில் ஓடிச் சென்றோம். அவனை நாம் முன்பின் கண்டதில்லை. அழுதபடி இருந்த அவனிடம் யாரென்று விசாரித்தோம்.

தனது பெயர் சீராளன் என்றும் தனது பாட்டி வீட்டுக்குப் போய்கொண்டிருப்பதாகவும் வழியில் குழியொன்றினுள் சைக்கிள் விழுந்ததால் தனக்கு இப்படி நேர்ந்ததென்றும் சொன்னான். அவனது முழங்காலில் இருந்து இரத்தம் வடிந்தது. நானும் நண்பர்களும் அவனுக்கு ஆறுதல் கூறினோம். காயத்தைத் துடைத்துக் கட்டுப் போட்டோம். அவனை சைக்கிளில் இருத்தி பாட்டி வீட்டுக்குக் கூட்டிச் சென்றோம். அவன் எமக்கு நன்றி கூறினான். பாட்டியும் எம்மை வாழ்த்தி அனுப்பினார்.

**மாமா** - நல்லகாரியம் செய்தீர்கள். உதவி தேவைப்படுபவர் எவராக இருந்தாலும் நாம் தயங்காது உதவ வேண்டும். முன்னைய காலங்களில் வீடுகட்டும் போது வழிப்போக்கர் இளைப்பாற என்று திண்ணை கட்டுவார்கள். பிறர்மீது இரக்கம் காட்டுவதும் அவர்களுக்கு உதவுவதும் மிகவும் சிறந்த பண்பு.




**அகிலன்** - எனது கதையைக் கேளுங்கள். அன்று ஒரு தைப்பொங்கல் தினம். வீட்டில் ஒரே ஆரவாரம். நானும் ஆரணியும் புத்தாடை அணிந்து குதூகலமாக நின்றோம். மாவிலை, தோரணம் கட்டினோம், கோலம் போட்டோம், எமது செல்லப்பிராணி வீமாவும் எம்மையே சுற்றிச்சுற்றி வந்தது.

நாம் வெடிகள் நிறைய வாங்கி வைத்திருந்தோம். நான் வெடிகளைக் கொளுத்தத் தொடங்கினேன். ஆரணியும் வெடிகளைக் கொளுத்தினாள்.

எல்லாம் முடிந்து பார்த்தால் வீமாவைக் காணவில்லை; தேடினோம். வீட்டினுள் ஒரு மேசையின்கீழ் வீமா ஒடுங்கிப் போய் இருந்தது. எனக்கு அதைப் பார்க்கப் பரிதாபமாகக் கிடந்தது.

வீமா வெடிச்சத்தத்துக்குப் பயந்துபோய் ஒளிந் திருக்கிறது என்றார் அம்மா. எனக்கு மன வருத்தமாக இருந்தது. எமக்கு மகிழ்ச்சி தரும் வெடி, நாய்களுக்குத் துன்பத்தையல்லவா தருகிறது?

அன்றுமுதல் நான் வெடி கொளுத்துவதில்லை என்று உறுதிபூண்டேன். நம்மை அண்டிவாழும் பிராணிகளை நாம் ஆதரிக்க வேண்டும். அவற்றைத் துன்புறுத்தக் கூடாது எனப் புரிந்துகொண்டேன். எமது மகிழ்ச்சி மற்றவர்களுக்குத் துன்பமாக அமையக்கூடாது என்பதையும் விளங்கிக் கொண் டேன்.



***மாமா*** - *அருமை! அருமை! பிராணிகளிடத்து அன்பு செலுத்துவது நற்பண்பு. 'அன்பே சிவம்' அல்லவா! பிராணிகளிடத்து நாம் கருணை காட்டினால் நமக்கு இறையருள் கிட்டும். எமது முன்னோர்கள் பிராணிகளைத் தம் சொந்தப் பிள்ளைகளாகவே பராமரித்தார்கள். தாகத்தோடு வரும் பிராணிகளுக்கு தண்ணீர்த்தொட்டி, ஆவுரோஞ்சுகல் முதலான வற்றை அமைத்து பிராணிகளை ஆதரித்தார்கள். நாமும் உயிர்களிடத்து அன்பு கொண்டு அவற்றைப் பாதுகாத்துப் பராமரிக்க வேண்டும். அடுத்து கதை கூறப்போவது யார்?*

**ஆரணி** - அன்று ஒரு வெள்ளிக்கிழமை. நாங்கள் கோயிலுக்குச் சென்றிருந்தோம். பூசை முடிந்ததும் விபூதி பிரசாதம் பெற்றோம். கோயிலின் வெளிவீதியில் ஒருவர், அனைவருக்கும் பொங்கல், வடை கொடுத்துக் கொண்டிருந்தார். எல்லோரும் வரிசையில் நின்று அந்தப் பிரசாதத்தைப் பெற்றனர். நானும் வரிசையில் நின்று பிரசாதம் பெற்றேன். ஆனால் எனது முறை வந்ததும் பிரசாதம் முடிந்து விட்டது.

எனக்குப் பின்னால் ஒரு சிறுமி நின்றிருந்தாள். அவளது முகம் வாடிவிட்டது. நான் எனது பங்கை அவளுக்குக் கொடுத்தேன். ஆனால் அவள் ஏற்க மறுத்தாள். அவளைச் சமாதானப்படுத்தினேன். பிரசாதத்தை இருவருமாகப் பகிர்ந்து உண்டோம். எனக்கு அது மிக மகிழ்ச்சியாக இருந்தது.

**மாமா** - மிக நல்ல பழக்கம் ஆரணி! எமக்குக் கிடைக்கும் சிறு பங்கு உணவையும் பகிர்ந்துண்ண வேண்டும். ‘எள் என்றாலும் ஏழாய்ப் பகிர்ந்து உண்’ என்பார்கள். ஒருவர் பசித்திருக்க நாம் உண்பது பெரும் பாவம். பூரணி! எங்கே உன் கதை?

**பூரணி** - முதலாம் தவணைப் பரீட்சை முடிந்ததும் ஆசிரியர் எமது விடைத்தாள்களைத் தந்தார்.

கணித பாட விடைகளைச் சரிபார்க்கச் சொன்னார். புள்ளிகளைக் கூட்டிப் பார்த்தேன். எனக்கு மூன்று புள்ளிகள் மேலதிகமாக வழங்கப் பட்டிருந்தது. ஆசிரியரிடம் அதைப் பற்றிக் கூறினேன். ஆசிரியர் மறுபடியும் கூட்டிப்பார்த்தார். 82 புள்ளிகளே வரவேண்டியிருந்தது. ஆனால் எனக்கு 85 புள்ளிகள் வழங்கப்பட்டிருந்தன. எனது செயலை வகுப்பறையில் எல்லோருக்கும் கூறிப் பாராட்டினார். எல்லோரும் என்றும் உண்மை பேசுகின்றவர் களாகவும், நேர்மையானவர்களாகவும் இருக்க வேண்டும் என்று கூறினார்.

***மாமா*** - மிகவும் நல்லது பூரணி. எப்போதும் நாம் நேர்மையானவர்களாக இருக்க வேண்டும். சரி, நேரமாகி விட்டது. எல்லோரும் நித்திரைக்குச் செல்வோம். வாருங்கள்.

**''மக்கள் சேவையே**
**மகேசன் சேவை''**

## பயிற்சி

I. **கதைகளுக்குத் தலைப்பிடுவோம்.**

பிறருக்கு உதவுவோம், பகிர்ந்து உண்போம்,
நேர்மையாக இருப்போம், உயிர்களை நேசிப்போம்

1. அகிலனின் கதை ____________________
2. ஆரணியின் கதை ____________________
3. அமலனின் கதை ____________________
4. பூரணியின் கதை ____________________

II. **பின்வருவனவற்றின் பயன்களை எழுதுவோம்.**

1. திண்ணை ____________________
2. தண்ணீர்த் தொட்டி ____________________
3. ஆவுரோஞ்சுகல் ____________________

## செயற்பாடு

**நீங்கள் ஒவ்வொருவரும் செய்த நல்ல செயல்களைக் கூறுங்கள்.**

# 24 வாக்குண்டாம்



வாக்குண்டாம்; நல்ல மனமுண்டாம்; மாமலராள்

நோக்குண்டாம்; மேனி நுடங்காது - பூக்கொண்டு

துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்

தப்பாமற் சார்வார் தமக்கு.

**பதவுரை**

பவளம்போன்ற(சிவந்த) திருமேனியையும் தும்பிகையையும் உடைய விநாயகக் கடவுளது திருவடிகளை, பூவைக் கொண்டு தவறாமல் வணங்குபவர்களுக்கு, நல்ல சொல்லாற்றல் உண்டாகும்; நல்ல மனம் உண்டாகும்; தாமரைப்பூவில் இருக்கின்ற இலக்குமியினுடைய கருணை(செல்வம்) கிடைக்கும்; உடல், பிணிகளால் வாடிப் போகாது.

| | | |
|---|---|---|
| **துப்பு** | - | பவளம் |
| **மாமலராள்** | - | இலக்குமி |
| **நுடங்காது** | - | வாடாது |

**நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந்நன்றி**
**என்று தருங்கொல் என வேண்டா - நின்று**
**தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்**
**தலையாலே தான் தருதலால்.**

**பதவுரை**

நீண்டு உயர்ந்து வளர்ந்த தென்னை மரம், தன் அடிப்பாகத்தால் (வேரால்) உண்ட நீரை தலையாலே (இளநீராக) தருகின்றது. அதனால் யாரேனும் ஒருவருக்கு நாம் ஒரு நன்மையைச் செய்தால் அதற்குப் பிரதிபலன் எப்போது கிடைக்கும் என்று யோசிக்க வேண்டாம்.

| | | |
|---|---|---|
| **நன்றி** | - | நன்மை |
| **தெங்கு** | - | தென்னை |

**நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்**
**கல்மேல் எழுத்துப்போல் காணுமே - அல்லாத**
**ஈரமிலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்**
**நீர்மேல் எழுத்திற்கு நேர்.**

**பதவுரை**

நற்குணமுடையவராகிய ஒருவர்க்குச் செய்த உதவியானது கல்லின் மேல் எழுதப்பட்ட எழுத்தைப்போல் நிலைத்து விளங்கும். அன்பில்லாத மனமுடையவருக்குச் செய்த உதவி தண்ணீரின்மேல் எழுதப்பட்ட எழுத்திற்கு ஒப்பாகும் (அழிந்துவிடும்).

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று.

**பதவுரை**

நல்லவர்களைக் காணுதலும் நல்லதே; நல்லவருடைய பயன் நிறைந்த வார்த்தைகளைக் கேட்பதும் நல்லதே; நல்லவருடைய நற்குணங்களைப் பற்றிப் பேசுதலும் நல்லதே; அந்த நல்லவரோடு சேர்ந்திருப்பதும் நல்லதேயாம்.

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர் தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை; கற்றோர்க்குச்
சென்ற இடம் எல்லாம் சிறப்பு.

**பதவுரை**

*அரசனையும் குற்றந்தீரக் கற்றவனையும் ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்தால், அரசனைவிட, கற்றவனே சிறப்புடையவனாவான். (ஏனெனில்) அரசனுக்கு அவனுடைய நாட்டில் அல்லாமல் பிற இடங்களிலே சிறப்பு இல்லை . கற்றவர்களுக்கு செல்லும் இடம் எல்லாம் சிறப்பு உண்டாகும்.*

**நீதி நூல்களைக் கற்போம்.**
**நீதி நெறிப்படி வாழ்வோம்!**

## பயிற்சி

**விடை எழுதுவோம்.**

1. விநாயகக்கடவுளைத் தினமும் வழிபட்டால் கிடைப்பவை யாவை?

2. 'நன்றி ஒருவற்கு' என்ற பாடல்மூலம் அறிந்து கொள்வது யாது?

3. நல்வர்களுக்குச் செய்த உதவியும் அன்பற்றவர்களுக்கு செய்த உதவியும் எவ்வெவற்றிற்கு ஒப்பிடப்படுகின்றன?

4. 'நல்லாரைக் காண்பதுவும்' என்ற பாடலில் நல்லனவாகக் கூறப்படுவன எவை?

5. கற்றவர்கள் எவ்வாறு மன்னனைவிட மேலானவர்கள்?

## செயற்பாடு

'வாக்குண்டாம்' பாடல்களை மனனம் செய்து ஓதுவோம்.